

# மாத்வ மித்திரன்.

# THE MADWA MITRAN.

EDITOR:
**Adyam Bhagavatha Ranganathachariar,**
KUMBAKONM

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

24 AUG 19

| Vol. 8. | யுவ ஸம்வத்ஸரம் | No. |
|---|---|---|
| புஸ்தகம் 8. | சிராவண மாஸம். (14—8—35 புதவாரம்.) | நெ. 2. |

| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | தாத்பரிய நிர்ணயம். (ஸ்ரீமத்வாசாரியார்) | 33 |
| 2. | சங்கரலீலா விலாஸம். | 41 |
| 3. | அப்பைய்ய தீக்ஷதரின் அதிக்ஷேபணைகளுக்கு கண்டனம் | 45 |
| 4. | விதவா விவாக கண்டனம். | 49 |
| 5. | ஸ்ரீமத்வ விஜயம், (ஸ்ரீ[illegible]தாசாரியார்) | 52 |
| 6. | [illegible] | 56 |
| | [illegible] | 57 |
| | [illegible] | 58 |
| | [illegible]ளம்பரம். | 59 |
| | [illegible]ர். | 64 |

DIGITIZED
N35-8.2
20873

[illegible] பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

## ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்.

**தபால் சார்ஜ் இனும்! ஒரே ஒரு பிரதிதான் பாக்கி**

முதலில் கிரயத்தைை பூரா அனுப்புகிறவருக்குத்தான் Preference உண்டு. பிந்தி அனுப்பியவருக்கு கட்டாயம் கிடையாது. வியாபாரத்தில் ஒரே ஒரு பிரதிதான் பாக்கி. கும்பகோணம் பதிப்பு. ஸம்பூர்ணஸப்தகாண்டம் வால்மீகி ராமாயணம். அழகிய காலிகோபயிண்டுள்ள 3-வாலியங்கள் பிரஸித்தமான கோவிந்தராஜீய வியாக்யானத்துடன் கடகம் தீர்த்தம் திலகம் முதலிய வியாக்யானங்களின் குறிப்புகளுடன்கூடியது. கேட்லாக் விலையைவிட மிகக்குறைவு. ரூ 24தான். அடியிற்கண்ட விலாஸத்துக்கு பணத்தை உடனே அனுப்பவும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

### மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள். இது பிரதி ...ர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு ...ந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப் ...கைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் 'அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்ப வேண்டும்

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம்,. கும்பகோணம்.

---

**மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம் தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.**


ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாயநம.

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

---

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்

---

### இருபத்தி இரண்டாவது அத்தியாயம்

(ஸ்ரீமத். வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

(முன் 8ம் பக்கம் தொடர்ச்சி)

---

பலராமர் இவ்வாறு அதிகபலமுள்ள சத்துருவான ஏகலவ்யனை யுத்தத்தில் ஜயித்து ஸந்தோஷமாய் ஸ்ரீகிருஷ்ணரிடம் வந்தார். பௌண்ட்ரக வாஸுதேவன் ஸாத்யகியால் தடுக்கப்பட்டும் அவனை அசட்டைசெய்து ஸ்ரீ கிருஷ்ணரிடம் யுத்தத்திற்கு வந்து சேர்ந்தான். ஸ்ரீ கிருஷ்ணர் பௌண்ட்ரகனை ஓர் நொடியில் ரதம் ஆயுதங்களில்லாமல் செய்தார். பிறகு அந்த பௌண்ட்ரகன் தன்னுடைய ஊருக்கு ஓடிப்போனான். அங்கு போய் ஸ்ரீ கிருஷ்ணருக்கு ஓர் தூதனை அனுப்பினான். அந்த தூதன் வந்து, "ஹே கிருஷ்ணா! நான் ஒருவன் தான் வாஸுதேவன். என்னுடைய அடையாளங்களான சக்ர சங்காதிகளை நீ எடுத்துவிட்டு நாசமில்லாதவனான என்னை நீ சரணமடை." என்றிவ்வாறு பௌண்ட்ரக வாஸுதேவன் சொல்லியனுப்பினான். இந்த தூதனின் வார்த்தையைக் கேட்டுவிட்டு யாதவச்ரேஷ்டர்கள் உரக்கச் சிரித்தனர். ஸ்ரீ கிருஷ்ணரும் சிரித்துவிட்டு எனக்கு அடையாளங்களாயுள்ள சக்ர சங்காதி ஆயுதங்களை யுத்தத்தில்

208731

உனக்கு கொடுக்கிறேன் என்று தூதனைச் சொல்லும்படி சொன்னான். இவ்வாறு சொல்லப்பட்ட தூதன் பௌண்ட்ரக வாஸுதேவனிடம் வந்து ஸ்ரீ கிருஷ்ணர் சொன்ன வார்த்தையைச் சொன்னான். பௌண்ட்ரகன் இந்த வார்த்தையைக்கேட்டு யுத்தம் செய்ய துவாரகைக்கு புறப்பட்டான். ஸ்ரீ கிருஷ்ணரும் யுத்தம் செய்ய பௌண்ட்ரக் வாஸுதேவனிடம் புறப்பட்டார். அந்த பௌண்ட்ரகன் ஸ்ரீ கிருஷ்ணருடன் ஸமானமாய் இருப்பதற்காக ரதத்தில் ஸுவர்ணமயமான கருடனைவைத்து அதன் மீது ஏறி உட்கார்ந்திருந்தான். தங்கத்தால் செய்த சக்ரசங்காதி ஆயுதங்களை தரித்திருந்தான். ஸ்ரீ வத்ஸமரு தன் மார்பில் இருப்பதற்காக தன் மார்பை நெருப்பைக்கொண்டு சுட்டுக்கொண்டிருந்தான். இதைப் பார்த்துவிட்டு ஸ்ரீ கிருஷ்ணர் சிரித்தார். பிறகு ஸ்ரீ கிருஷ்ணர் அஸ்திர சஸ்திரங்களை விருஷ்டி செய்யும் பௌண்ட்ரக வாஸுதேவனை ஜயித்து சக்ராயுதத்தாலேயே பௌண்ட்ரக வாஸுதேவனின் கழுத்தைச் சேதித்தார். அவனைக் கொன்றபின் அவனுடைய மாதாமஹனான காசிராஜனின் கழுத்தை பாணத்தால் வெட்டினார். ஸமர்த்தரான ஸ்ரீ கிருஷ்ணர் அந்த காசிராஜனின் சிரஸ்ஸை பாணத்தால் கொண்டுபோய் காசிப்பட்டணத்திலேயே போட்டார். அந்த பௌண்ட்ரக வாஸுதேவன் நானே ப்ரம்மம் வாஸுதேவன் என்ற விபரீத ஞானத்தால் நித்யமாயுள்ள அந்தம் தமஸ்ஸை அடைந்தான். அந்த பௌண்ட்ரகனுக்கு ஸஹாயம் செய்த காசிராஜனும் பாபபுத்தியுள்ளவனாதலால், கிம்மீராஸுரன் ஹிடிம்பாஸுரன் ஸால்வராஜன் மற்ற ஜராஸந்தன் முதலான தைத்யர்கள் எவ்வாறு அந்தம் தமஸ்ஸை அடைந்தனரோ அவ்வாறே அந்தம் தமஸ்ஸில் விழுந்தான். ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு பௌண்ட்ரகனையும் காசிராஜனையும் ஸம்ஹாரம் செய்து துவாரகைக்கு வந்து ருக்மணியிடம் மறுபடியும் அக்ஷணமே ப்ரத்யும்னனை உண்டாக்கினார்.

## ஏகலவ்யனின் ஸம்ஹாரம்.

ஏகலவ்யன் பலராமரால் பராஜயமடைந்து பரமசிவனின் உத்தேசமாய் தவம் செய்தான். பரமசிவனால் யாராலும் ஜயிக்கப் படாதிருக்கும் வரனைப்பெற்றான். பரமசிவன் கொடுத்த வரத்



தால் கர்விஷ்டனான ஏகலவ்யன் மறுபடியும் ஸ்ரீ கிருஷ்ணருடன் யுத்தத்திற்கு வந்தான். ஸ்ரீ கிருஷ்ணர் அவனுடைய அஸ்திர சஸ்திரங்களைத் தடுத்து சக்ராயுதத்தால் ஏகலவ்யனை சிரச்சேதம் செய்தார். பாபியான அந்த ஏகலவ்யன் ஸ்ரீ கிருஷ்ணத்வேஷத்தால் நித்ய துக்கம் வருவதாயுள்ள கோரமான தமஸ்ஸை அடைந்தான்.

## ஸுதக்ஷிண ராஜனின் ஸம்ஹாரம்.

இப்படி யாதவ சிரேஷ்டனான ஸ்ரீ கிருஷ்ணர் பாபியான பௌண்ட்ரகனையும் காசிராஜனையும் சம்ஹாரம் செய்தபின் காசி ராஜனின் பிள்ளையான ஸுதக்ஷிண ராஜன் பரமசிவனைக்குறித்து மேலான பக்தியுடன் தபஸ் செய்தான். பாபபுத்தியுள்ள கெட்ட மனங்கொண்டவனான அந்த ஸுதக்ஷிண ராஜன் ப்ரத்யக்ஷமாய் வந்த பரமசிவனை ஸ்ரீ கிருஷ்ணரை ஸம்ஹரிக்க வேண்டுமென்று வரனைக்கேட்டான். பரமசிவனும் அஸுராவேசத்தால் விவேகமிழந்துபோய் ஸ்ரீ கிருஷ்ணரைக் கொல்வதற்காகவென்று தக்ஷிணாக்னியில் ஓர் கிருத்யா பிசாசத்தை உண்டாக்கி அதை ஸுதக்ஷிண ராஜனிடம் கொடுத்தார். அந்த கிருத்யா பிசாசரூபியான தக்ஷிணாக்னி அஸுராவேசமுள்ளவனாய் அந்த ஸுதக்ஷிண ராஜனால் பூஜிக்கப்பட்டவனாய் பரமசிவனின் வரத்தால் விருத்தியடைந்த ஸாமர்த்தியமுள்ளவனாய் ஸம்பூர்ண சக்தியுள்ளவரான ஸ்ரீகிருஷ்ணர் இருந்துவரும் துவாரகைக்கு வந்து சேர்ந்தான். பின் அனந்த வீரியம் கொண்ட ஸ்ரீகிருஷ்ணர் தக்ஷிணாக்னியைத் தடுக்க தன் க்ரூரமான ஸுதர்சனமென்னும் சக்ராயுதத்திற்கு ஆக்ஞையிட்டார். அமோகமான வீரியமுள்ளதாய் விசேஷமாய் ஜொலிக்கும் அந்த சக்ராயுதம் அந்த தக்ஷிணாக்னியை வெகுதூரம் ஓட்டிவிட்டது. ப்ரதானமான அக்னியின் மகனான அந்த கிருத்யா பிசாச ரூபமுள்ள தக்ஷிணாக்னி சக்ராயுதத்தால் ஓட்டப்பட்டவனாய் பிறகு பரிவார ஜனங்களுடனும் பெண்டு பிள்ளைகளுடனும் கூடிய ஸுதக்ஷிண ராஜனை சீக்கிரமே பஸ்மம் செய்துவிட்டது. சக்ராயுதம் அவனுடைய காசி நகரத்தையும் தகனம் செய்து ஸ்ரீகிருஷ்ணரின் சமீபம் வந்து சேர்ந்தது. ஸ்ரீகிருஷ்ணரிடம் த்வேஷத்தால் ஸுதக்ஷிண ராஜன் மகாபலிஷ்டனாய் பரி

வாரஜனங்களுடன் தமஸ்ஸுக்கு போய் சேர்ந்தான்.

அதிகம் பூர்ணமான நித்யானந்தமுள்ள ஸ்ரீகிருஷ்ணர் துவாரகாபுரியில் சந்தோஷமாய் இருந்துகொண்டு ஒருஸமயம் கிருகஸ்தாச்ரமிகளின் காரியங்களை அனுகரணம் செய்துகொண்டு நிர்தோஷியான ருக்மணியுடன் எப்பொழுதும் விரோதமில்லாதவராயினும் ருக்மிணியைப்பார்த்து ஹே மங்களகரமானவளே! உன்னால் எனக்கு ஆகவேண்டியதொன்றுமில்லை, சத்ருக்களின் மானபங்கத்திற்காகவே நான் உன்னை அபகாரம் செய்தேன். என்று சொன்னார். அப்பொழுது ருக்மிணியும் ஸ்ரீகிருஷ்ணருடன் தனக்கு எப்பொழுதும் வியோகமில்லை என்று அறிந்திருந்தும் பத்னியாள் புருஷனுக்கு எப்பொழுதும் பயந்திருக்க வேண்டுமென்னும் தர்மத்தை காட்டிக்கொடுப்பதற்காக துக்கங் கொண்டவள்போல் காட்டிக்கொடுத்தாள். தேவோத்தமரான ஸ்ரீகிருஷ்ணர் கிருகஸ்தாச்சிரமிகளின் தர்மத்தைக் காட்டிக் கொடுத்துக்கொண்டு துக்கமில்லாதவளான ருக்மணியை ஸமாதானம் செய்தார்.

## பலராமர் யமுனையை இழுத்தது.

இவ்வாறு பத்மநாபனான ஸ்ரீகிருஷ்ணர் ரமாதேவியான ருக்மணியுடன் விளையாடிவரும்பொழுது பலராமர் ஸ்ரீகிருஷ்ணரின் ஆக்ஞையைப்பெற்று கோகுலத்திற்குச் சென்றார். அவ்விடம் நந்தகோபன் யசோதா இவர்களைப்பார்த்து இவர்களால் பூஜிக்கப்பட்டவராய் ஸ்ரீகிருஷ்ணரின் சம்பந்தமாய் ப்ரசினம் செய்துகொள்ளப்பட்டார். அப்பொழுது அவர் இரண்டு மாஸம் கோகுலத்தில் வாஸம் செய்தார். கோபஸ்திரீஜனங்களுடன் க்ரீடித்தார். மத்யபானம் செய்தவராய் யமுனாநதியை தன்னுடன் போகம் செய்ய அழைத்தார். பலராமர் மதங்கொண்டு அழைத்திருக்கிறார் என்று அறிந்து யமுனை வரவில்லை. அப்பொழுது உத்தம வீரியமுள்ள பலராமர் யமுனா நதியை தன் கலப்பை ஆயுதத்தால் இழுத்தார். உடனே யமுனை நமஸ்காரம் செய்து ஸ்தோத்திரம் செய்ய அவளை விட்டு விட்டார். பிறகு பலராமர் அங்கு நந்தகோபனிடம் சொல்லிக்கொண்டு துவாரகைக்கு



வந்து சேர்ந்தார். நந்தகோபாதிகளுக்கு இருந்துவரும் பக்தியை ஸ்ரீகிருஷ்ணரிடம் அறிவித்தார்.

## மைந்தத்விவதர்களைக் கொன்றது,

அச்சமயம் ராமாவதாரகாலத்திய மைந்தன் த்விவதன் என்னும் இரண்டு வானரங்கள் அவர்களின் நண்பனான நரகாஸுரன் ஸ்ரீகிருஷ்ணரால் கொல்லப்பட்டுப் போனான் என்று கோபங் கொண்டு அஸுராவேசமுள்ளவர்களாய் ஸ்ரீகிருஷ்ணருக்கு ப்ரதிகூலம் செய்ய, த்வாரகைக்குச் சேர்ந்ததான ஆனர்த்த தேசத்தை நாசம் செய்தனர். பிறகு ஸ்ரீகிருஷ்ணர் பலராமரைப் பார்த்துச் சொன்னார். அண்ணாவே! ப்ரம்மாவின் வரத்தாலும் அமிர்த பானம் செய்ததாலும் மைந்தன் த்விவதன் என்னும் இரண்டு வானரங்கள் ஒருவராலும் சொல்லப்படாதிருப்பவர்களாயிருப்பினும் உன்னால் அவர்கள் கொல்லப்படுகிறவர்களாய் ஆகட்டும் என்று கமலநயனான ஸ்ரீகிருஷ்ணர் பலராமருக்கு வரனைக் கொடுத்தார். நீ அந்த வானரங்களைக் கொல்லப்போ என்று சொன்னார். அந்த பலராமர் ரைவத பர்வதத்திற்குச் சென்று கோபத்துடன் யுத்தத்திற்குவந்தார். மைந்தன் என்ற வானரத்தை ரைவத பர்வதத்தின் உச்சியில் முதல்நாள் ஸம்ஹாரம் செய்தார். பூஜ்யமான காரியமுள்ள பலராமர் மறுநாள் கற்களை வாரிப்போடும் விவதன் என்ற வானரனையும் தன் முசலாயுதத்தால் ஸம்ஹரித்தார். மைந்தன் விவிதன் இவர்களில் ப்ரவேசித்திருந்த இரண்டு அஸுரர்கள் அந்தம் தாமஸ்ஸை அடைந்தனர். அவ்வானரங்களாகிய அசுவினி தேவர்கள் தங்கள் லோகத்திற்கு சென்றனர்.

## ஹஸ்தினாநகரை தலைகீழாக்கியது.

முன்பு ரதிதேவியாயிருந்தவள் இச்சமயம் துரியோதனின் பெண்ணாய் மனோகரமான ரூபமுள்ளவளாய் லக்ஷணாதேவி என்று பிறந்தாள். அவளுக்கு சுயம்வரம் நடக்கும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணரின் பிள்ளையான ஸாம்பன் பலாத்காரமாய் அவளை அபகரித்

தான் அந்த லக்ஷணாதேவி ஸாம்பனிடம் ஆசைகொண்டவளாயிருந்தாள். அந்த லக்ஷணையை ஸாம்பன் பலாத்காரமாய் அபகரித்ததைப்பார்த்து கர்ணன் துரியோதனன் முதலியோர் கோபத்தால் ஜ்வலித்துக்கொண்டு அவனுடன் யுத்தம் செய்தனர். எல்லா திருதராஷ்டிர பிள்ளைகளும் கர்ணன் பூரிச்ரவஸ்ஸு இவர்களுடன் சேர்ந்து துரியோதனின் பாஹு பலத்தைக்கொண்டே எல்லோரும் ஒன்று கூடியவர்களாய் வெகு சிரமப்பட்டு ஒண்டியாயிருந்த ஸாம்பனை ரதமில்லாமல் செய்தனர். ஸாம்பனை இவர்கள் பிடித்துக்கட்டியிருக்கும் விருத்தாந்தத்தை நாரதர் வாயால் எல்லா யாதவர்களும் கேட்டுவிட்டு கௌரவர்களுடன் யுத்தம் செய்வதில் பிரயத்தினம் செய்தனர். பலராமர் யாதவர்களைத் தடுத்து சமாதானத்தை விரும்புகிறவராய் உத்தவருடன் கூடி துரியோதனாதிகளிடம் தானே சென்றார். ஹஸ்தினாபுரத்திற்கு வெளிப்புரத்திலுள்ள உத்யான வனத்தில் தான் இருந்துகொண்டு உத்தவனை கௌரவர்களிடம் அனுப்பினார். அப்பொழுது எல்லா கௌரவர்களும் பலராமரிடம் வந்து பலராமரை பூஜித்தனர். அப்பொழுது பலராமர் உக்ரஸேனராஜன் செய்த உத்திரவை அறிவித்தார். உங்கள் அரசனான உக்ரஸேனராஜன் உங்களுக்கு ஸாக்ஷாத்தாய் ஆக்ஞை செய்திருப்பதென்னவென்றால் எமது குமாரனான ஸஹாயமில்லாதிருந்த ஸாம்பனை நீங்கள் அநேகர் சேர்ந்து பிடித்துக்கட்டி வைத்திருக்கிறீர்கள். பந்துத்வமிருப்பதால் நீங்கள் செய்த குற்றத்தை நாம் மன்னித்திருக்கிறோம். சீக்கிரமே ஸாம்பனை அவிழ்த்துவிட்டு விடுங்கள் என்று இவ்வாறு உங்களுக்கு உக்ரஸேனராஜன் ஆக்ஞையிட்டிருக்கிறான். என்றிவ்வாறு பலராமர் சொன்னவார்த்தையை துரியோதனாதிகள் கேட்டு இதற்கு பதிலாயுள்ள கடுமையான வார்த்தைகளை பலராமர் காதில் விழச்செய்து கோபத்துடன் இவர்கள் ஹஸ்தினாபுரம் பிரவேசித்தனர். அச்சமயம் பலராமர் கோபங்கொண்டார். தன் கலப்பைக் கொண்டு அந்த ஹஸ்தினா நகரையே இழுத்து கங்கையில் கவிழ்த்து விடப்போகவும் பலராமர் ஸமஸ்தமான கௌரவர்களாலும் நமஸ்காரம் செய்யப்பட்டவராய் தடுக்கப்பட்டார். பிறகு துரியோதனனால் பூஜிக்கப்பட்டவனும் லக்ஷணா



தேவியுடன் சேர்ந்திருப்பவனுமான தன் பிள்ளையான ஸாம்பனை துரியோதனன் கொடுத்த சீருகளுடன் பலராமர் தன் துவாரகைக்கு அழைத்துச்சென்றார். பகவான் நாராயணரின் ஆவேசமுள்ளவராய் ஆதிசேஷரின் அவதாரமாயிருப்பவரான பலராமர் செய்த இத்யாதி மஹத்தான உத்தம காரியங்கள் வெகுப்ரசித்தமாயிற்று.

பலராமரிடம் சுக்லகேசத்தின் ரூபமான பகவான் விசேஷமாய் அபிவ்யக்தி அடைந்திருக்கும் ஸமயத்தைக்கண்டு கொண்டு பீமசேனர் அச்சமயம் பலராமருடன் விளையாட்டு யுத்தத்திற்கு போவதில்லை. பலதடவைகளில் பலராமருடன் விளையாட்டுக்காக யுத்தம் ஏற்பட்டிருந்தபோதிலும் பீமசேனர் அச்சமயம் பலராமரிடம் உண்டான சுக்லகேசரூபியான பகவான் விஷ்ணுவின் விசேஷமான ஆவிர்பாவத்தைக் கண்டுகொண்டு அச்சமயம் பலராமர் அவர் அதிகமாய் ஹிம்சிக்கப்பட்டிருந்தபோதிலும் விஷ்ணுவிடமுள்ள மகா பக்தியால் பலராமரை பதில் ஹிம்சிப்பதில் எத்தனம் செய்வதில்லை. பலராமர் பகவானுடைய விசேஷ ஆவேசகாலத்தில் பீமசேனரை ஜயிப்பார். பகவானுடைய விசேஷ ஆவேசத்தை அடையாதிருக்கும் காலத்தில் பலராமரை பீமசேனர் ஜயிப்பார். பலராமரிடம் எப்பொழுதுமே சுக்லகேசாவேசம் இருந்து வந்ததால் அது எப்பொழுது விசேஷமாய் அபிவ்யக்தமாகிறதோ அச்சமயம் என்று அதன் அபிவ்யக்தி என்னும் விசேஷமான சப்தம் ப்ரயோகம் செய்யப்பட்டது.

## பாணாஸுர உபாக்யானம்.

இப்பேர்ப்பட்ட மகிமையுள்ள பலராமருடன் சேர்ந்த கமலநாபனான ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகாபுரியில் வசித்துவரும் பொழுது, ஒரு ஸமயம் ஸ்வப்னத்தில் அநிருத்தனால் ரமிக்கப்பட்டவளான பாணாஸுரனின் மகளான உஷாதேவி தன் சகியான சித்ரலேகை என்னும் அப்ஸரஸைப்பார்த்து என்னுடன் என் ஸ்வப்னத்தில் ரமித்த அந்த புருஷனை அழைத்துவா என்று சொன்னாள். அதற்கு அந்த சித்ரலேகை பதினான்கு லோகங்களிலுள்ள புருஷர்களை சித்திரப்படுதாவில் எழுதி உஷைக்கு காண்பிக்கவும் இவன் தான் என்னுடன் ரமித்தவன் என்று உஷை

சொன்னவார்த்தையால் அவன் ஸ்ரீ கிருஷ்ணரின் பேரன் அநிருத்தன் என்று அறிந்து சித்ரலேகை அந்த அநிருத்தனை மாயா வித்தையால் இரவிலேயே உஷையின் அந்தப்புரத்திற்கு கொண்டு வந்துவிட்டாள். சித்ரலேகையால் அழைத்துக்கொண்டு வரப்பட்ட மேலான குணமுள்ள அநிருத்தனை அடைந்து பாணாஸுரனின் மகளான உஷை வெகுநாள் ரமித்தாள். கன்யா அந்தப்புரத்தில் மறைந்திருந்த அநிருத்தனை அதன் அதன் ஸம்ரக்ஷகர்கள் கண்டுகொண்டு பாணாஸுரனிடம் அறிவித்தனர். பாணாஸுரன் அநிருத்தனைப் பிடித்துக்கட்டுங்கள் என்று கிங்கரர்கள் என்னும் ராக்ஷஸர்களுக்கு ஆக்ஞையிட்டான். மகா பலசாலியான அநிருத்தன் தன்னைப்பிடிக்கவந்த கிங்கரர்களென்னும் ராக்ஷஸர்களை வாசல் தாழ்பாளான பரிகாயுதத்தால் ஸம்ஹாரம் செய்து பாக்கியிருந்தவர்களை விரட்டிவிட்டான். பிறகு பாணாஸுரன் சுயம்தானே யுத்தத்திற்கு வந்தான். பாணாஸுரன் யுத்தம்செய்து மிகவும் சிரமப்பட்டு நாகாஸ்திரத்தால் அநிருத்தனைக் கட்டிப்போட்டான். இந்த சமாசாரத்தை ஸ்ரீகிருஷ்ணர் நாரதர் வாயால் கேட்டபின் பலராமன் ப்ரத்யும்னன் இவர்களுடன் கூடி கருடன்மீதேறிக்கொண்டு பாணாஸுரனுடைய சோணிதமென்னும்நகரத்திற்கு வந்தார். முதலில் அந்த நகரத்திற்கு காவலாயிருந்த அக்னிகளுடனும் ப்ரதான அக்னியான அங்கிஸ்ஸுடனும் யுத்தம்செய்து அந்த எல்லா அக்னிகளையும் விரட்டி பரமசிவனின் ப்ரமத கணங்களையும் விரட்டி விட்டு பிறகு ஜ்வரனிடம் வந்து சேர்ந்தார். அந்த சைவஜ்வரத்தின் விபூதி ப்ரஹாரத்தால் ஜ்வரம் அடைந்த பலராமரை ஜகத் ப்ரபுவான ஸ்ரீகிருஷ்ணர் ஆலிங்கனம் செய்து ஜ்வரமில்லாமல் செய்தார். பிறகு அந்த சைவஜ்வரத்துடன் ஸ்ரீகிருஷ்ணர் சுயம் சிறிதுகாலம் யுத்தக்ரீடை செய்தபின் அவனை தன் முஷ்டிப்ரஹாரத்தால் பொடியாக்கி அவனை ஜயிப்பதற்காக அச்சுதனான ஸ்ரீகிருஷ்ணர் வைஷ்ண ஜ்வரத்தை சிருஷ்டி செய்தார். ப்ரபுவான ஸ்ரீகிருஷ்ணர் ருத்ரனின் சேவகனான சைவஜ்வரத்தைத் தான் ஜயித்தாலும் அது சிலாக்யமாக மாட்டாதென்றும் அவனை தன் சேவகனைக் கொண்டே ஜயிக்கவேண்டுமென்றும் அபிப்பிராயம் கொண்டு சுயம் தனியாக ஓர் ஜ்வரத்தை சிருஷ்டி செய்தார். (தொடரும்)



# சங்கரலீலா விலாஸம்.

(முன் 7வது வால்யூம் 332-ம் பக்கம் தொடர்ச்சி.)

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் M. A , எழுதுவதாவது:—

உண்மையை யோசித்தால் எங்கும் இறந்தவனென்று உண்டு, உயிருள்ளவனென்று உண்டு. இறந்த உயிருள்ளவனென்றும், சவசிரஞ்சீவி என்றும் எங்கும் நான் கண்டதில்லை. ஜகத் இருந்துவருகிறதென்றால் மனதிற்கு நன்றாய் தெரியக்கூடும், அல்லது இல்லை என்று சொன்னாலும் மனதில்பதியும். இதை விட்டு இருத்தலும் இல்லாமையும் சேர்ந்தது அல்லது இருப்பதாய் சொல்லவும் முடிவதில்லை, இல்லை என்றும் சொல் சொல்லவும் முடிவதில்லை. இவ்வாறு சேர்ப்பது தான் இதன் தத்வமென்று சொல்வது கட்டுக்கதைக்கு உசிதமான விஷயமே ஆகும். இது ஓர் பெரும் வஞ்சனை.

(9) இந்த ஸந்தர்பத்தில் மற்றொரு விஷயத்தை அறிவிக்க எண்ணுகிறேன். (1) வேதம் பிரமாணம் என்றும் நாமெல்லோரும் வைதீக சிகாமணிகளென்றும் சங்கராசாரியார் சொல்லுகிறார் வார்த்தை என்னமோ மிகவும் மதுரமாயிருக்கிறது. உண்மையை விசாரிக்க வேண்டியதவசியமாகும். தலையை மொட்டையடித்துக்கொண்டு காவி வஸ்திரத்தை உடுத்துக்கொண்டிருந்தால் மட்டில் ஸன்யாஸி பூஜ்யன் என்று சொல்லிவிடலாமா? அவன் சூத்திர ஸன்யாஸியாயிருக்கலாம்; அவன் பிராம்மணனா சூத்ரனா என்று விசாரிக்கவேண்டியதவசியமல்லவா? அதுபோல் இவருடைய வார்த்தையை சிறிது பரிசீலனை செய்வோம். வேதம் பிரமாணமென்றால் சங்கராசாரியாரின் அபிப்பிராயமென்ன? அவருடைய மதத்தின்படி வேதம் மித்யை பொய் என்றால் அது பின்னாடியுமிருந்ததில்லை இப்போதுமில்லை இனியுமிருக்கப் போவதில்லை. இப்படி மூன்று காலத்திலேயும் இருக்காத வஸ்துவால் ஞானம் ஏற்படலாமென்றால் முயற்கொம்பும் மலடிமகனும் உண்டென்று ஞானம் ஏன் ஏற்படலாகாது? மேலும் மித்யாபூதமான அதாவது பொய்யான வஸ்துக்களுக்கு அர்த்தக்ரியாகாரித்வம் ஏற்படாது. அதாவது சிப்பி வெள்ளியைக்கொண்டு நகைகளை செய்துகொள்ள முடியாது? மேலும் கயிற்றுப் பாம்பால் நாம் ஓடிப்போய் விடுவ

தில்லை. ஆனால் ஸத்யமாயுள்ள ஞானவிசேஷமான கயிற்றுப்பாம்பு பிரமையால் தான் நாம் ஓடுகிறோம். ஆகையால் வேதம் மித்யை என்று சொல்லிவிட்டு அந்த வேதத்தால் அநேக விஷயங்கள் தெரியவருகிறது என்று சாம்பசாஸ்திரிகளின் வார்த்தையைக்கொண்டு நாம் பேசினால் வஜ்ஜிர சும்பனின் வார்த்தையாகுமேயல்லாது சரியான வார்த்தையாகாது.

மேலும் வேதம் பிரம்மம் செய்யும் சிருஷ்டியாதிகளைச் சொல்லுகிறது. சந்தியாவந்தனம் முதலான கர்மங்களைச் சொல்லுகின்றது. வேதம் பிரமாணமானால் தான் வேதத்தால் சொல்லப்படும் இவைகள் உண்மையானவைகளாகும். சங்கராசாரியார் வேதங்களைப்பற்றி என்ன சொல்கிறார் என்றால் இவைகளெல்லாம் அதத்வா வேதகப்ரமாணங்கள் அதாவது அதத்வத்தைச் சொல்லும் பிரமாணங்கள் என்றார். அதத்வா வேதகம் என்றால் பொய்யைச் சொல்லும் என்று அர்த்தம். ஆகவே அதத்வா வேதப்ரமாணகமென்றால் வேதம் பொய்யைச்சொல்லும் பிரமாணம்=பொய்யைச்சொல்லும் நிஜவாதம்= பொய் த்வத்தைப்போதிப்பது=அபிரமாணமென்று பொருள்படுகிறது. உலகில் ஸத்யமான விஷயங்களை போதிக்கும் நூல்கள் பிரமாணங்களென்றும் பொய்யான விஷயங்களை போதிக்கும் நூல்கள் அபிரமாணங்களென்றும் நிச்சயமாகியிருக்கிறது. அதன்படி வேதத்தில் தத்வமஸி முதலான நான்கைந்து வாக்ய பாகங்களைத்தவிர மற்ற எல்லா பாகங்களும் பொய்யைச் சொல்கிறவைகள் என்று சங்கராசாரியார் ஒப்புக்கொண்டிருக்கிறார். அதனால் கர்மங்கள் சிருஷ்டி உபாஸனை முதலியவைகளைச்சொல்லும் வேதபாகங்கள் எல்லாமே அபிரமாணமென்றே அவர் ஒப்புக்கொண்டது போலாகிறது.

இதனால் மற்றொரு விஷயம் ஏற்பட்டது. ஒரு பொய்யைச் சொன்ன ஸாக்ஷியின் விஷயத்தில் நியாயாதிபதி ஜாக்கிரதையாயிருப்பான். அநந்தமான பொய்களைச் சொன்ன வேதம் தத்வமஸிமுதலான நான்கைந்து வாக்யங்களில் மட்டில் உண்மையைச் சொல்லியிருப்பதாய் நாம் நம்புவதெப்படி? ஆக வேதம் ஸர்வப்ரகாரமாய் அபிரமாணமென்றே ஏற்பட்டது? வைதீகத்தன்மை எப்பேர்ப்பட்டதென்று பார்த்தீர்களா? ஆட்டை அடிப்பவன் அதை அணைத்துக்கொண்டு கொல்வான். சங்கராசாரியார் நமஸ்காரம் செய்துவிட்டு வேதத்தை தரையோடு தரையாய் தேய்த்து விட்டார். அநந்தமான வேதங்களுமே எரிந்துபோனாலும் அவருக்கு என்னமோ நஷ்டமில்லை. அவருக்கு வேண்டியது தத்வ



மஸி முதலான நான்கைந்து வேதபாகங்கள் தான். அவைகள் அவருக்குச் செய்யும் உபகாரமும் அவ்வளவு தான். அவருடைய பிரம்மம் சித்தியாகுவது வேதத்தில் ஆவதில்லை என்று அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். அவருடைய மதத்தின்படி ப்ரம்மம் அக்ஞேயன் அறியப்படாதவன் தானே?

சிலர் வேதம் வ்யாவஹாரிகமான விஷயங்களை போதிக்கின்றனவென்று சமத்காரமாய் சொல்லுகின்றனர். கம்பீரமான இந்த வாக்யத்தை ஸாமானிய வைதீகன் எப்படி அர்த்தம் செய்துகொள்வான். இதில் ஏதோ பரமரகசியம் அடங்கியிருக்கிறதென்று எண்ணுகிறான். உண்மை என்னவென்றால் வியாவஹாரிக விஷயங்களை வேதம் போதிக்கிறது என்றால் செத்த பிணம் பிராணனை ஆசிரயித்திருக்கிறது என்று சொல்கிறபடி பொய்யானவைகளை வேதம் கூறுகிறதென்று அர்த்தமாகும். வியாவஹாரிகப்ரமாண மென்றாலும் அபிரமாணமென்றாலும் ஒன்றுதான். அத்வைத கல்பதருவென்னும் பிரஸித்தமான நூலில் இந்த விஷயத்தை அத்வைத கிரந்த கர்த்தாவே ஒப்புக்கொண்டிருப்பதாய் ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆக வேதஸம்ஹார ரூபமான மகா வஞ்சனை சங்கராசாரியாரின் வார்த்தையால் ஏற்படுகிறது.

ஸர்வம் கல்விதம் ப்ரம்ம என்ற சுருதிக்கு அர்த்தம் செய்திருப்பதைப் பார்த்தாலேயே சங்கராசாரியார் செய்திருக்கும் வஞ்சனையின் கிரமம் நன்கு புலப்படும். எல்லாமே ப்ரம்மம் என்றால் என்ன அர்த்தம். வைதிகப் பிச்சு வாயுள்ள ஸ்மார்த்த ப்ராம்மணன் எல்லாமே பிரம்மம் சூரியன் ப்ரம்மம், சந்திரன் ப்ரம்மம், இந்திரன் பிரம்மம் சிருங்கேரி ஸ்வாமிகள் ப்ரம்மம் கும்பகோணம் சங்கராசாரியார் ப்ரம்மம் என்று அறிகிறான். இந்த அபிப்பிராயத்தின் பேரில்தான் சிருங்கேரி சங்கராசாரியார் ஸ்வாமிகள் தன்னுடைய பாதுகைக்கு விஷ்ணு ஸஹஸ்ரநாமம் சொல்லி புஷ்பாதிகளால் அர்ச்சனையைப் பெறுகிறதென்ற சம்பிரதாயம் வந்திருக்கிறது. இந்த விவக்ஷையின் பேரில் தான் பாரதி முதலான உத்தம குரு ஜனங்களின் விக்ரஹத்தை ஸ்வாமி விக்ரஹத்தின் ஸ்தானத்தில் வைத்து தேவர்களுக்கு உசிதமான மந்திரத்தால் பூஜிப்பதென்பது ஏற்பட்டிருக்கிறது. இதனாலல்லாது வேறு எதனாலும் அத்வைத மதத்தின்படி எந்த விதியும் ஏற்படக்கூடியதாயில்லை. மேலும் ஸர்வமும் பிரம்மமே என்ற விவக்ஷண இன்னமும் எவ்வளவோ கேடுகளை உண்டுபண்ணிவிட்டது. ப்ரதம ப்ராப்தஸ்ய பரித்யாகே காரணாபாவாத் என்ற

நியாயத்தை அனுஸரித்து சிராத்தத்திற்கு முதலில் நிமந்தண அழைப்பால் வந்து சேர்ந்திருக்கும் பித்ருக்களுக்கு அர்ப்பணம் செய்தபிறகுதான், அவர்கள் போஜனம் செய்தபிறகுதான், நாராயணனுக்கு நைவேத்யம் சிராத்த தினத்தில் செய்யும் ஸ்மார்த்த ப்ராம்மணர்களின் சம்பிரதாயம் ஏற்பட்டிருக்கிறது இந்த விவக்ஷையின்படிதான் நானே ப்ரம்மம் என்று அத்வைத உபாஸனை செய்பவருக்கு ஈசுவரோஹமஹம் போகீ முதலான பகவத் கீதா சுலோகத்தில் சொல்லப்பட்டுள்ள நரகாதி அநர்த்தங்கள் உண்டாகின்றனவென்று த்வைதிகள் சொல்லும் கண்டனையும் நன்கு பொருத்தமாயிருக்கின்றன. வேறு வகையிலும் கண்டனைகள் பொருந்துவதை பின்னடி நிரூபிக்கிறேன். இப்படியிருக்க ஸர்வமும் பிரம்மமே என்று இந்த சுருதிக்கு அர்த்தம் செய்வது சங்கராசாரியாருக்கு அவ்வளவு சம்மதமாயில்லை, சிறிதும் அவருக்கு ஸம்மதமில்லை என்று சொல்லிவிடவும் நமக்கு தைரியம் இல்லை. மற்றொரு ஸந்தர்பத்தில் இதில் உள்ள சூக்ஷ்ம விஷயத்தை அறிவிக்கிறேன். ஆகமொத்தம் அவருக்கு அதிகப்ரியமான அர்த்தம் இதுவல்லவென்று நாம் சொல்லலாம். இது குச்சிதமான அர்த்தம். அதமமான அர்த்தமாகிறது. ஸர்வம் கல்விதம் ப்ரம்ம என்பதற்கு உத்தமமான சங்காராசாரியாரின் அர்த்தம் யாதென்றால் ஸர்வமும் ப்ரம்மம் அல்ல என்பதுதான். இதைக் கேட்டுவிட்டு வாசகர்கள் திடுக்கிடவேண்டாம், இது உண்மை. ஸர்வமும் ப்ரம்மம் என்ற வாக்யத்திற்கு ஸர்வமும் ப்ரம்மமல்லவென்றே அத்வைதவித்யா நிதிகளுக்கெல்லாம் குருவான சங்காராசாரியாரின் அர்த்தம். ஸம்பூதி என்னும் பதத்தை அஸம்பூதி என்றே வாசித்து அவ்வறே அர்த்தம் செய்திருக்கிறார். இதம் ஸர்வம் ப்ரம்ம என்றால் ப்ரத்யக்ஷாதிகளால் சித்தமான இந்த ஜகத்தெல்லாம் மித்யை ப்ரம்மம் ஸத்யம் என்று அர்த்தமென்கிறார். இந்த வாக்யார்த்தத்தின் வஞ்சனை ஸாமானியர்களுக்கும் ஸ்பஷ்டமாய் புலப்படுவதால் அதிகமாய் இதில் சொல்லவேண்டியதில்லை.

(11) இவ்வாறே பிரம்மம் ஜகத்துக்கு உபாதன காரணம் அதாவது குடத்திற்கு மண் எவ்வகை காரணமோ அப்படிப்பட்ட காரணம் என்று சொல்லும் சுருதியின் கழுத்துக்கு சங்காராசாரியார் சுருக்கு போட்டார். பிரம்மம் ஜகத்துக்கு உபாதான காரணம் என்று சொன்னால் அவருக்கு விகாரம் என்பது ஏற்படுமே என்னசெய்வது என்று ஓர் வைதிகப்பிச்சு கேட்டார். அதற்கு சங்காராசாரியார் உமக்கு சாஸ்திரார்த்தம் தெரியாது. உபாதானம் ச த்விவிதம் பரிணாமி உபாதானம் விவர்த்தோபாதானமபீத்யுச்யதே என்று ஸம்ஸ்கிருதத்தில் தடதட என்றுபேசினர், (தொடரும்).



# அப்பைய தீக்ஷதரின் அதிக்ஷேபணைகளுக்கு கண்டனம்.

(முன் 24ம் பக்கம் தொடர்ச்சி)

மேலும் பிரம்மபுராணம் க்ஷேத்திரகாண்டம் வெங்கடகிரி மகாத்மியத்தில் மூன்றுவது அத்யாயத்தில் சங்கலிகித ஸம்வாதத்தில் இருப்பதாவது:—த்வம் சாபிகச்ச சைலேந்திரம் பூர்வம் ஸ்வர்ண முகிதடே 1 யத்ர பிரம்ம சிலா நாம ஸரின்மத்தியே ச வர்த்தே 111 அகஸ்த்யதபஸா பஸ்சாத் கயா ஸான்னித்யமத்ரவை 1 பாதா ஈசான் விஷ்ண்வாதி தேவானும் தத்ர ஸந்தி ஹி 1 யதிரூபோமாதரிச்வா அஷ்டாவிம் சதிமே கலௌ 1 அவதீர்ய வஸத்யத்ர மத்வநாமா வரம் விபோ: 131 அவாப தபஸா புண்ய: ப்ரீத்யா சாகஸ்த்யயோகின: 1 தத்ஸ்தாபிதாலயே புண்யே சாதுர்மாஸ்யம் கரிஷ்யதி 1 சுக: ச்ரோஷ்யதி தச்சாஸ்திரம் பத்ம தீர்த்தாதிஹாகத: 11 என்றால் ஸ்வர்ணமுகி தீரத்திலுள்ள உத்தமமான மலைக்கு நீரும் செல்லும். அங்கு அந்த நதியின் மத்தியில் பிரம்மசிலை இருக்கிறது. அகஸ்தியரின் தபோ மகிமையால் அங்கு கயையின் ஸான்னித்யம் உண்டு. பரமசிவன் விஷ்ணு முதலான தேவர்களின் பாதங்கள் இருக்கின்றன. இருபத்தி எட்டாவது கலியில் வாயுபகவான் யதிரூபியாய் மத்வாசாரியார் என்ற பெயருள்ளவராய் அங்கு வசிக்கப்போகிறார். பகவானுடைய வரனை தன் தபஸ்ஸால் அடையப்போகிறார். அகஸ்திய மகரிஷியின் அன்பால் அவர் ஏற்படுத்தியிருக்கும் ஆலயத்தில் சாதுர்மாஸ்யம் நடத்தப்போகிறார். பத்ம ஸரோவரத்திலிருந்து வந்து சுகாசாரியார் அவருடைய சாஸ்திரங்களைக் கேட்கப் போகிறார்.

இவ்வாறு ஆப்தர் என்பதற்கு ப்ரமாணங்கள் இருப்பதைக் கொண்டு, ஆபஸ்தம்பாதிகள் உதாஹரணம் செய்த சுருதிகளைப் போல் எமது ஆசாரியாள் உதாஹரித்திருக்கும் சுருதிகளும் புத்திமான்களால் ஏற்றுக்கொள்ளத்தகுந்தவைகளே ஆகும். விம்சல்லக்ஷணதோ நாந: தபஸ்வீ பஹுவேதவித் 1 வேத இத்யேவ

யம்பச்யேத் ஸ்வேதோக்ஞானதர்சனாத் என்னும் ப்ரம்மாண்ட வசனத்தைக்கொண்டு உத்தமபுருஷர்களின் இருபது லக்ஷணங்களுக்கு குறையாத லக்ஷணங்களுள்ளவரும் தபஸ்வியானவரும் அநேக வேதங்களை அறிந்திருப்பவரும் ஞான திருஷ்டியால் இது வேதம் என்று அறிகிறாரோ அதுவே வேதம் என்றிருப்பதால் ஸர்வக்ஞரான எமது ஆசாரியாளால் வேதமென்று பார்க்கப்பட்டது வேதமே இதரர்களால் பார்க்கப்படாத சுருதிகளை உம்முடையவர் எப்படி பார்த்தார் என்று கேட்கமுடியாது. ஒருவர் பார்க்காததை மற்றொருவர் பார்க்கத்தகுந்ததல்லவென்றில்லை. இதரர்கள் பார்க்காத சில சுருதிகளை ஆபஸ்தம்பர் முதலானவர்களால் பார்க்கப்படவில்லையா? மேலும் எமது ஆசாரியாள் பார்த்ததை ஸர்வக்ஞர்களான இதரர்கள் பார்த்திருக்கும் பக்ஷத்தில் அவைகளை எங்கேயாவது உதாஹரித்திருக்க மாட்டார்களா என்றால் அவைகளில் அவர்களுக்கு ஔதாஸீன்யம் இருந்திருக்கலாம். அதனால் அவைகளை உபயோகப் படுத்தாமலிருக்கலாம். தன் புத்திபலத்தைக்கொண்டு வைதீகமான கர்மங்களுக்கு விருத்தமான ஓர் தர்மத்தை ஏற்படுத்திக்கொண்டு அதற்கு பிரமாணமாக வேத வாக்யத்தையும் கல்பித்து தர்மத்தை வ்யவஸ்தை செய்தால் அது அவ்யவஸ்தைதானே ஆகும் என்று கேட்டால் எமது ஆசாரியாள் உதாஹரித்திருக்கும் சுருதிகள் பிரத்யக்ஷமாயுள்ள சுருதிகளுக்கு ஒத்ததாய் விரோதமாயில்லாமலிருக்கின்றன. இதனால் தர்ம வ்யவஸ்தைதான் ஏற்படும். மேற்கூறிய புராண வசனங்களால் தர்மத்தை நிலைநிறுத்துகிறவரென்று எமது ஆசாரியாள் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் பரம ஆப்தரான எமது ஆசாரியாள் சுருதிக்கு ஸமானமான வாக்யங்களை கல்பனம் செய்பவரென்று சொல்லமுடியாது. ஆப்தராய் இல்லாதவர்கள் தான் அவ்வாறு கல்பனம் செய்து தர்மத்தின் வ்யவஸ்தையைக் கெடுப்பவர்கள். ஆகையால் கல்ப ஸூத்திரங்களில் ஆபஸ்தம்பாதிகள் கிலசுருதிகளை உதாஹரணம் செய்தது தோஷமில்லாதது போல் பாஷ்யகாராதிகளில் கில சுருதிகளை உபயோகப்படுத்தியது தோஷமாகாது. மேலும் எமது சாஸ்திரங்களில் கில சுருதிகளும் உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன. பூர்வமீமாம்ஸை



யில் தத்ரோர் ஜபகூனன்யோத்யூர்ஜோ வருத்யா முதலான சில சுருதிகள் உபயேகப்படுத்தப்பட்டிருக்கும்பொழுது எங்களுக்கு மட்டில் கில சுருதிகளை உதாஹரித்திருப்பது தோஷமா? மேலும் சங்கர பாஷ்யத்தில் அதஏவசோபமா ஸூர்யகாதிவத் என்ற ஸூத்ரத்தில் யதாஹ்யயம் ஜோதிராத்மா விவஸ்வான் என்னும் கில சுருதி உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே ஸம்பிருத்யதிகரணத்திலும் ப்ரம்மஜ்யேஷ்டா என்ற ராணாயனீ சுருதியாகிய கில சுருதி உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. ராமானுஜ பாஷ்யத்திலும் ஓம் ஜ்யோதிஸ் சரணா பிதானாத் அதிகரணத்தில் இந்திர: சசீபதி: பலேன பீடித: என்னும் கில சுருதி உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ கண்டபாஷ்யத்திலும் யஸ் சண்டாள: சிவ இதிவா சம் வதேத் தேனஸஹ ஸம்வஸேத் தேனஸஹஸம்வதேத் தேனஸஹபுஞ்ஜீத என்னும் கில சுருதி உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. இப்படி இருக்க எங்கள் பாஷ்யத்தில் உதாஹரிக்கப்பட்டிருப்பது மட்டில் ஓர் குறையா? இதர பாஷ்யங்களில் எங்கேயோ ஒன்றிரண்டு இடங்களில் கில சுருதிகளை உதாஹரித்திருக்கின்றனர். உங்கள் பாஷ்யத்தில் அதிகமாக இருக்கின்றனவென்றால் இதில் என்ன விசேஷம்? ஒரு கில சுருதியை உதாஹரிப்பது தோஷமாயில்லாதிருந்தால் அப்பேர்ப்பட்டதை அநேகங்களை உதாஹரிப்பதும் தோஷமாகாதுதான். தற்போது பாடத்திலுள்ள சுருதிகளைத்தவிர கில சுருதிகள் என்பது இல்லவே இல்லை என்றா அல்லது எமது ஆசாரியாள் உதாஹரித்திருப்பவைகள் தான் இல்லை என்றா உங்கள் அபிப்பிராயம். கல்ப ஸூத்ரகாரர்களாலும் இதர பாஷ்யகாரர்களாலும் அப்பேர்ப்பட்ட சுருதிகள் உபயோகப்படுத்தப் பட்டிருப்பதால் அவைகள் இல்லவே இல்லை என்று சொல்வதற்கில்லை. கல்ப ஸூத்ர வ்யாக்யானம் செய்தவர்கள் இன்னது கிலசுருதி இன்னது அகிலசுருதி என்று லக்ஷணங்களைச்சொல்லி விபாகம் செய்து காட்டியிருக்கின்றனர். ஒவ்வொரு வேதத்திற்கு அநேக சாகைகள் இருப்பதாய் கேள்விப்படுகிறோம். அவைகளில் சில சாகைகள்தான் பாடத்திலிருந்து வருகின்றனவென்பதையும் நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆதலால் அப்பேர்ப்பட்ட சுருதிகள் இல்லவே இல்லை என்று நிச்சயிக்கமுடியாது. எமது ஆசாரியாள் சொன்ன சுருதிகள் தான்

இல்லை என்றால் இதராள் சொன்ன சுருதிகளையும் அவ்வாறு நாம் இல்லை என்று சொல்லக்கூடுமல்லவா? பரம ஸம்பாவிதர்களால் அந்தசுருதிகள் உபயோகப்படுத்தப் பட்டிருப்பதால் நாம் அவைகளை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிருக்கிறதென்றால் அந்த கக்ஷி எமது ஆசாரியாள் விஷயத்திலும் பொருந்தும். எமது ஆசாரியாள் மேற்கூறிய பிரமாணங்களால் பரம ஸம்பாவிதரென்று ஏற்பட்டிருப்பதால் அவர் சுருதிகள் என்று சொன்னதையும் ஒப்புக்கொள்ளவேண்டியதே ஆகும். மேலும் மற்றொரு கக்ஷியும் பேசலாம். எமது ஆசாரியாள் சொன்ன சுருதிகள் அபிரஸித்தமானவைகள் என்று சொல்கிறீரே? அபிரஸித்தம் யாருக்கு? உமக்கா அல்லது இதராளுக்கா? உமக்கென்றால் இந்த சுருதிகளை அறிய முடியாமல் நான் பரம மூடனாயிருக்கின்றேனே என்று நீர் துக்கப்பட வேண்டியதிருக்க சந்தோஷத்துடன் உம்மை நீர் சிலாகித்துக் கொள்கிறீர். தன்னைவிட புத்திமானும் பாக்யவானுமிருப்பவனைப் பார்த்துவிட்டு நான் இப்பேர்ப்பட்ட அறிவில்லாமல் மூடனாய் இருக்கிறேனே. இப்பேர்ப்பட்ட பாக்கியமில்லாமல் நான் தரித்திரனாய் இருக்கிறேனே என்று விவேகியாயிருப்பவன் பச்சாத்தாபப்பட வேண்டியதவசியம். ஓர் தரித்திரன் தன் மனதால் கூட எண்ணமுடியாததான அளவற்ற ஐசுவரியம் ஒருவனிடம் இருப்பதாய்க் கேட்டால் அந்த வாக்யம் பொய், மித்யை, கல்பிதம், இவ்வாறு இருக்காது, என்று சொல்லிக்கொண்டிருந்தால் அந்த பாக்யவானுக்கு அவனுடைய ஸம்பத்து இல்லாமற் போகுமா என்ன? அதனால் அந்த பாக்யவானுக்கு என்ன குறை? அதுபோல் பரமஸம்பாவிதரான எமது ஆசாரியாள் தம் அர்த்தத்திற்கு ஆதாரமாய் வேதங்களை எடுத்து உபன்யாஸம் செய்தாரென்றால் வேதங்களின் கௌரவத்தை அதாவது வைதிக மரியாதையை அவர் ஸம்ரக்ஷித்ததாய் தான் ஆகும். நீர் அந்த வேதங்களை அறியவில்லை என்றால் அதனால் அவருக்கு என்ன பாதகம்? உம்மைவிட மூடனாயிருப்பவன் நீர் அவனுக்கு தெரியாதிருக்கும் சுருதி முதலியவைகளை உதாஹரணம் செய்தால் உம்மையும் நீர் சொல்லும் கக்ஷிப்படி தூஷிக்க வேண்டியதுதானே ஆகும். இந்த சுருதிகள் இதராளுக்கு அபிரஸித்தமென்றால் அதை எப்படி நீர் அறிந்தீர் என்று கேட்போம். இதராளுடைய புத்தி உமக்கு அப்ரத்யக்ஷமாயிருக்க கிணற்றுத் தவளைபோல் இருந்துவரும் நீர் அதை எப்படி நிச்சயிக்கமுடியும்? இதைதான் மகா பாஷியத்தில் பதஞ்சலி சொல்லியிருக்கிறார்.

(தொடரும்.)



# விதவா விவாக கண்டனம்.

(முன் 7வது வால்யூம் 275ம் பக்கம் தொடர்ச்சி,)

இப்படியிருக்க அக்ஷத யோனி என்பதற்கு இந்த விதவா விவாக சபை புருஷ ஸம்யோகமடையாதவளென்று அர்த்தம் செய்திருக்கிறது. இதனால் வந்த பயனென்ன? புருஷஸம்யோகமடையாத புனர்பூவுக்கு விவாகம் உண்டென்று இந்த ஸ்மிருதி சொல்வதால் விதவையும் புனர்பூ எனப்படுவாள் என்றும் அவளுக்கு விவாகம் செய்வது சாஸ்திர ஸம்மதமாகும் என்றும் இச்சபை கருதியிருக்கிறதுபோலும். முதல் பிரமாணத்திற்கு நாம் காட்டிய ஆக்ஷேபணைக்கு இந்த ஸ்மிருதியாலும் ஸமாதானம் ஏற்படவில்லை. அக்ஷத யோனியாயிருந்தால் அவள் ஸப்தபதியை நிறைவேற்றியவளாய் இருக்கவேண்டுமென்பது என்ன நியமம்? மேலும் "வாசாதத்தா மனோதத்தா அக்னிம் பரிகதா ஸப்தமம் பதம் நீதா கிருஹீத கர்பா ப்ரஸூதா சேதி ஸப்தவிதா புனர்பூ: தாம் கிருஹீத்வா ந ப்ரஜாம் ந தர்மம் விந்ததே" என்று இந்த ஸ்மிருதி கர்த்தாவான போதாயனரே புனர் பூக்களை எழுவகையாய்ப் பிரித்து புருஷ ஸம்யோகமடைந்து கர்ப்பம் தரித்திருப்பவளையும் புனர்பூவாய் சொல்லியிருக்கிறார். இவ்வேழு வகையாரையும் விவாகம் செய்துகொள்வது தர்மமல்லவென்றே கருதியிருக்கிறார். ஆதலால் அவருடைய சொந்த வாக்யத்தைக்கொண்டும் இதர மகரிஷிகளின் பிரமாணத்தை அனுஸரித்தும் மேற்கண்ட ஸ்மிருதிக்கு அர்த்தமென்னவாகிறதென்றால் ப்ரௌடையாகாதவளோ அல்லது இச்சபையின் அர்த்தப்படி புருஷஸம்பந்தமடையாதவளோ ஆகிய ஓர் பெண் ஸப்தபதியை பூர்த்தி செய்யாதவளாயிருந்தால் இந்த ஸ்மிருதியில் கண்ட ஸந்தர்பங்களில் புனர் விவாஹம் செய்துகொள்ளத் தகுதியுள்ளவளாய் ஆவாளே ஒழிய பிரஜாவிருத்திக்கும் தர்ம விருத்திக்கும் இந்த புனர்பூ விவாகம் காரணமாகமாட்டாது என்று ஏற்படுகிறது.

(6) அக்ஷதா பூயஸ்ஸம்ஸ்கிருதா

(விஷ்ணுஸ்மிருதி 15 அத்யாயம்)

இதை ஆறாவது ஸ்மிருதி ப்ரமாணமாக கூறப்பட்டிருக்கிறது. "அக்ஷத யோனியாயிருந்து புனர் விவாகம் செய்து கொண்டவளானால் புனர்பூ எனப்படுகிறாள்" என்று அர்த்தம் சொல்லப்படுகிறது. இது நாம் ஒப்புக்கொண்ட விஷயமே ஆகும். இதனால் விஷ்ணுஸ்மிருதி

புனர்பூ விவாகத்தை ஒப்புக்கொண்டிருப்பதாய் இச்சபை கருதியிருக்கிறதா? இந்த விஷ்ணுவே "பர்த்தரி ப்ரேதே ப்ரம்மசர்யம் அன்வாரோகணம் ச" "பர்த்தா இறந்தவுடன் ஸ்திரீகளுக்கு ப்ரம்மசரியம் தான் அல்லது உடன்கட்டை ஏறல்" என்று பதியிழந்த விதவைக்கு விதி ஏற்படுத்தியிருக்கிறார் என்பது இவர்களின் ஞாபகத்திலிருக்கவேண்டிய தவசியம்.

(7) "அக்ஷதா க்ஷதாசைவ புனர்பூஸம்ஸ்க்ருதா புன:"

(யாக்ஞவல்க்யர்)

இது ஏழாவது ஸ்மிருதி ப்ரமாணமாக சொல்லப்படுகிறது. "புருஷஸம்பந்தமடையாதவளோ அல்லது அடைந்தவளோ புனர்விவாகம் செய்து கொண்டவளானால் புனர்பூ எனப்படுகிறாள்." இதுவும் நாம் ஒப்புக்கொண்டதே. இதனால் இச்சபைக்கு ஏற்பட்ட லாபம் என்ன? இப்பேர்ப்பட்ட புனர்பூ விவாகத்தையும் யாக்ஞவல்க்யர் அனுமதித்திருக்கிறாரென்று இச்சபை கருதியிருக்கிறதா என்ன? யாக்ஞவல்க்யர் "அவிலுப்தப்ரம்மசர்யோ லக்ஷண்யாம் ஸ்திரியமுத்வஹேத்। அநந்ய பூர்விகாம் காந்தாம் அஸபிண்டாம்யவியஸீம்॥" பிரம்மசாரி தருமம் கெடாமல் தான் காப்பாற்றி வைத்துக்கொண்டு ஒருவன் லக்ஷணமுள்ள ஓர் கன்னிகையை விவாஹம் செய்துகொள்ளவேண்டும். அவள் இதற்குமுன் தானத்தாலோ உபயோகத்தாலோ அன்னியனால் கைக்கொண்டவளாயிருக்கக்கூடாது. ஒரே கோத்திரத்தில் பிறந்தவளாயிருக்கக் கூடாது. வயதில் தனக்கு குறைந்தவளாய் இருக்கவேண்டும். என்று விதி ஏற்படுத்தியிருக்கிறார். இதனால் விவாகம் செய்துகொள்ளவேண்டிய கன்னிகைக்கு முதன்மையான யோக்யதை அனன்ய பூர்வமாக இருக்கவேண்டு மென்பது யாக்ஞ வல்க்யரின் அபிப்பிராயமென்று ஏற்படுகிறது. அனன்ய பூர்வா என்றால் பூர்வத்தில் அன்னியனுக்கு சேராதவள் என்று ஏற்படுகிறது. அவ்வாறு அன்னியனுக்குச் சேர்ந்தவர்கள் புனர்பூ என்றும் ஸ்வைவரிணீ என்றும் இருவகை ஸ்திரீகள் என்றும் புனர்பூ எனப்படுபவள் க்ஷத யோனி அக்ஷதயோனி என்று இருவகையாள் என்றும் யாக்ஞ வல்க்யர் சொல்லும் சந்தர்ப்பத்திலுள்ள ஓர் சுலோகத்தின் ஓர் பாதியை மட்டில் எடுத்து ஸாமானியர்கள் ஏதோ யாக்ஞ வல்க்யர் புனர் விவாகத்திற்கு சாதகமாய் இருக்கிறாரென்று அறிந்து கொள்ளுமாறு இச்சபை ஆங்கிலத்தில் தமது இச்சபைப்படி அர்த்தம் செய்து விளம்பரம் செய்திருக்கிறது.



(8) பாணிக்ரஹே மிருதாபாலா கேவலம் மந்த்ர ஸம்ஸ்க்ருதா। ஸாசேதக்ஷதாயோனி ஸ்யாத் புனஸ்ஸம்ஸ்காரமர்ஹதி॥ என்று வஸிஷ்டர் கூறுவதாயும் இது எட்டாவது ஸ்மிருதிப்பிரமாணம் என்று கூறப்பட்டிருக்கிறது. "பாணிக்ரஹணம் நடக்கும் போது பர்த்தா இறந்து போய் அவள் மந்திரங்களால் மட்டில் ஸம்ஸ்காரமடைந்தவளாயும் ப்ரௌடையாகாதவளாயுமிருந்தால் புனர்விவாகம் செய்து கொள்ளத் தகுந்தவள் என்று இதன் பொருள் ஏற்படுகிறது, இந்த ஸ்மிருதியாலும் விதவா விவாக வாதிகளுக்கு வந்த ஸாதகமென்ன? பாணிக்ரஹணமென்ற கர்மம் ஸப்தபதிக்கு முன்பு என்பதில் ஸந்தேகமில்லை, ஸப்தபதிக்கு முன் நடக்கும் புனர் விவாகத்தை நாம் ஆக்ஷேபிக்கிறதில்லை. பாணிக்ரஹணம் நடந்தவளென்று ஸ்பஷ்டமாயிருக்க விவாகம் நடந்தவளென்று இச்சபை ஏனோ அர்த்தம் செய்யவேண்டும்? பாணிக்ரஹணம் மட்டில் நடந்தால் விவாகம் பூர்த்தியாகுமா? ஆதலால் ஸப்தபதிக்கு பிறகும் புனர் விவாகத்தை நடத்தலாமென்று அச்சபை சொல்லும் வாதத்திற்கு இது சாதகமாகாது.

(9) "யாசக்லீபம் பதிதமுன்மத்தம் வாபதிமுத்ஸிருஜ்ய யாந்யம் பதிம் விந்ததே மிருதே வாஸா புனர்பூபவதி। என்கிறார் வசிஷ்டர். இது ஒன்பதாவது ஸ்மிருதி பிரமாணமாக கூறப்பட்டிருக்கிறது, எவளொருவள் நபும்ஸகனோ பித்து பிடித்தவனோ உள்ள பதியை விட்டு வேறொரு பதியை அடைந்தாலும் சரி, அல்லது ஒரு பதி இறந்தபின் மற்றொரு பதியை அடைந்தாலும் சரி அப்பெண் புனர்பூவாகிறாள் என்று அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறது. இதை நாம் ஒப்புக்கொண்டதேயாகும். பதி என்ற நாமம் ஸப்தபதியை நிறைவேற்றிக்கொள்ளாமல் வாக்தானம் பெற்ற புருஷனுக்கே உண்டென்று முன்னம் "யாபூர்வம் பதிம் ஹித்வா" என்ற அதர்வண வேதமந்திரத்தின் அர்த்தம் விசாரம் செய்யும்பொழுது விவரித்து கூறியிருக்கிறோம். ஆதலால் இந்த பிரமாணமும் அச்சபைக்கு சாதகமானதல்ல. (தொடரும்)

208731
600 013

ஸ்ரீ நாராயணபண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ ம த் வ வி ஜ ய ம்.

## ஆ று வ து ஸ ர் க் க ம்.

(முன் 16ம் பக்கம் தொடர்ச்சி.)

(18) உடனே அங்குள்ள பண்டிதர்கள் எல்லோரும் கலந்து பேசி, வேண்டுமென்று ஆக்ரஹத்தின் பேரில் பிடிவாதமாய் அபலா என்னும் வார்த்தைக்கு குஷ்டரோகமுள்ளவள் என்று அர்த்தத்தை அதற்கு ஆதாரமில்லாமல் ஸாதித்துப் பேசவும், ஸ்ரீ மத்வாசாரியார் அந்த மூடஜனங்களைப் பார்த்து ஓர் பண்டிதர் சீக்கிரமே உங்கள் சமீபம் வரப்போகிறார், அவரை இந்த சப்தத்திற்கு என்ன அர்த்தமென்று கேளுங்கள் என்று சொல்லி விட்டு முன்னாடி பிரயாணம் செய்தார். (19) அவ்வாறே ஸ்ரீ மத்வாசாரியார் சொன்ன அடையாளமுள்ள ஓர் பண்டிதர் அவ்வூர் வந்து சேர்ந்தார். அவரை அவ்வூர் பண்டிதர்கள் அபலா என்னும் சப்தத்திற்கு என்ன அர்த்தமென்று கேட்கவும் அவர் பண்டிதோத்தமரான ஸ்ரீ மத்வாசாரியார் என்ன அர்த்தம் சொன்னாரோ அதன்படியே அர்த்தம் சொன்னார். (20) இதைக்கேட்டு அந்த கோள பண்டிதர்கள் பிரமாணங்களை எடுத்துச்சொல்லியே எல்லா விஷயங்களையும் பேசுகிறவராயுள்ள அந்த ஸ்ரீ மத்வாசாரியார் எல்லா கலைகளுடன் சேர்ந்த வேதவித்தைகளில் மட்டில் நிபுணராயிருக்கிறார் என்பது இல்லை; நடந்தும் நடக்கப்போவதுமான காரியங்களின் ஞானமும் உள்ளவரென்று நிச்சயம் செய்தனர். (21) எப்பொழுதும் எல்லா சபைகளில் வேத புராணாதிகள் எது எது அக்ஷணமே ப்ரஸக்தமானாலும் அவையெல்லாவற்றையும் இந்த ஸ்ரீ மத்வாசாரியார் அறிந்திருந்ததால் எல்லா பண்டிதர்களின் சபையிலும் இவர் ஸமஸ்தங்களையும் அறிந்த ஸர்வக்ஞயதி என்று பெயர்பெற்று பிரக்யாதி அடைந்தார். (22) ஸாது ஜனங்களாகிய ஆம்பல்களுக்கு ஆனந்தத்தைத் தருபவரான இந்த பூர்ணப்ரக்ஞாசாரியார் எங்கும் பரவியிருந்த தன் மேன்மையான



கீர்த்தியால் தான்நேரில் சஞ்சாரம் செய்யாதிருந்த இதர எல்லா இடங்களையும் பூர்ணசந்திரன் தன் சந்திரிகையால் போல் நன்கு வியாபித்தார். (23) தன் ஆசிரமத்திற்கு உசிதமான ஸதாசாரங்களுடனுள்ள ஸ்ரீ மத்வாசாரியார் தன் இந்த சஞ்சாரத்தில் மனோஹரமான அநேகவகை தேவாலய சமூகங்களால் அங்கு சிவாதி தேவர்களின் அந்தர்யாமியாயுள்ள லக்ஷ்மீபதியான ஸ்ரீ நாராயணனை மட்டில் நமஸ்கரித்துக்கொண்டு தன் தக்ஷிணதேசத்து சஞ்சாரத்தை முடித்து உடுபியிலுள்ள விஷ்ணுவான ஸ்ரீ அநந்தேசுவரரிடம் வந்துசேர்ந்தார். (24—31) அங்குவந்து சேர்ந்த பிறகு கருணைக்கடலாய் பூர்ணப்ரக்ஞரான ஸ்ரீ மத்வாசாரியார் முன்பு அவருடைய முன் அவதாரமான பீமசேனர், துரியோதனாதிகளால் ஹிம்சிக்கப்படும் த்ரௌபதியைப் பார்த்துவிட்டு துஷ்டக்ஷத்ரியர்களைக்கொல்ல திடமான சபதம் செய்ததுபோல், மாயாவாதிகளால் கெடுக்கப்பட்டு வருவதாயுள்ள வேத சமூகங்களைப் பார்த்துவிட்டு அந்த துஷ்டர்களான மாயாவாதிகளின் பக்ஷமாகிய அத்வைத சித்தாந்தத்தைக் கண்டிப்பதாய் திடமான சபதம் செய்தார். அந்த த்ரௌபதி எப்பேர்ப்பட்டவளென்றால் பிராம்மணோத்தமர்களான யாஜன் உபயாஜன் இவர்களின் மேலான ப்ரக்ஞையால் துருபதராஜனின் பாரியாள் உட்கொள்ளக்கூடியதான ஹவிஸ்ஸை அக்னியில் ஹோமம் செய்ததன் நிமித்தம் அக்னியினின்றும் வெளிக்கிளம்பிய மனுஷ்யர்களுக்குதக்க சரீரமுள்ளவள். வேத சமூகமும் பிராம்மணோத்தமர்களான வேதத்ரஷ்டாக்களாகிய மகரிஷிகளின் அந்தக்கரணம் பரிபக்வமடையுங்காலத்தில் அவைகளில் அபிவ்யக்தமாகும் சரியானதான ஸ்வரூபமுள்ளது. த்ரௌபதி மனோஹரமான கைகால்கள் முதலிய அவயவமுள்ளவள். வேதமும் வேதவ்யாக்யானம் செய்யத்தகுதியாய் மனோஹரமாயுள்ள சிக்ஷா கல்பம் முதலிய ஆறு அங்கங்களைக்கொண்டது. த்ரௌபதி ஸூத்திரக்கயற்றில் பிரகாசிக்கும் நவரத்தினங்களின் மாலைகளால் நன்றாய் அலங்கரிக்கப்பட்டவள். வேதமும் பிரம்ம ஸூத்ரங்களாகிய பிரகாசமான மாணிக்கங்களின் மாலைகளால் நன்றாய் வியாக்யானம் செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டதாயுள்ளது. த்ரௌபதி த்ரிபுவனத்திற்கும் பூஷணமாயிருப்பவள்.

வேதமும் வேதாதிகாரிகளான பிராம்மணாதிகளுக்கு பூஷணமாயிருக்கிறது. துரௌபதி தன் கால்களைக்கொண்டு ஸுந்தரமான நடைப்போடும் விலாஸங்களால் சோபிக்கிறாள், வேதமும் பாதங்கள் ஸுந்தரமான பதங்கள் கிரமங்கள் பாவங்கள் இவைகளால் பிரகாசிக்கிறது. துரௌபதி ஸ்பஷ்டமான கிருஷ்ண வர்ணத்தாலும் விஷ்ணு பக்தியாதி குணங்களாலும் பூர்ணமானவள். வேதமும் ஸ்பஷ்டமான அக்ஷரங்களின் குணங்களால் பூர்ணமாயிருக்கிறது. துரௌபதி பரதவம்சத்து உத்தமர்களான பாண்டவர்களால் விவாகம் செய்துகொள்ளப்பட்டு போஷிக்கப்பட்டவள். வேதமும் மகாபாரதமென்ன ஸாத்வீகமான புராணங்களென்ன இவைகளால் போஷிக்கப்பட்டது. துரௌபதி அவளுக்குத்தகுந்த வஸ்திரமுள்ளவள், வேதமும் அதற்கு உசிதமாயுள்ள மறைவுள்ளது. துரௌபதி அதி உத்தமமானதாய் இனிமையான ஸ்வரமுள்ளவள். வேதமும் உதாத்தம் முதலான உத்தமமான ஸ்வரங்களுள்ளது. துரௌபதி ராஜஸூயயாகம் முதலான ஸாது ஜனங்களின் யக்ஞயாகாதி ஸத்கிரியைகளில் பிரவிருத்தித்தவள். வேதமும் அப்படியே தன் மந்திரங்களால் அவைகளைச் செய்யும்படி பிரவிர்த்திக்கிறது. துரௌபதி வாஸுதேவனான ஸ்ரீ கிருஷ்ணரின் குணங்களில் மனமுள்ளவள். வேதமும் வாஸுதேவனான ஸ்ரீ நாராயணரின் குணங்களைச்சொல்வதில் மகா தாத்பர்யங்கொண்டது. துரௌபதி எல்லோருக்கும் எல்லா தர்மங்களையும் சொல்வதில் நிபுணளானவள். வேதமும் அப்படியே தான். துரௌபதி தன் ப்ரஜைகளால் தாயைப்போல் வணங்கப்பட்டவள். வேதமும் அப்படியேதான் தாயைப்போல் ஜனஸமூகங்களால் வணங்கப்படுகிறது. துரௌபதி நியாயமார்க்கமான பாண்டவர்களுக்கு பாதிராஜ்யம் கொடுக்கப்பட வேண்டியதென்பதைவிட்டு தனக்கே ஸாம்ராஜ்யத்வமிருப்பதாய் சொல்லிக்கொள்ளும் கபடமுள்ள அந்த துஷ்டனான துச்சாசனனால் கௌரவர்களின் சபையில் தலைக்கூந்தலை இழுக்கப்பட்டதால் மிகவும் துக்கப்பட்டிருந்தாள். வேதமோ ஸர்வ ஜனங்களுக்கும் ஸம்மதமாயுள்ளவரான நாராயணருக்குத்தான் ஸர்வேசுவரத்தன்மையை அறிவிக்கும் ப்ரம்ம மீமாம்ஸா சாஸ்திரத்தால் ஏற்பட்



டிருக்கும் நியாய விசாரத்தை விட்டுவிட்டு தனக்கே ஈசுவரத்தன்மையை அதாவது பரப்ரம்மத்வத்தை ஸாதிக்கும் துஷ்டஜனங்களான மாயாவாதிகளால் வித்வத்சபையில் சிரஸ்போன்றதான உபநிஷத்துக்களின் வாக்யங்களை தமது இச்சைப்படி ஐக்யம் முதலான அர்த்தத்திற்கு இழுப்பதால் மிகவும் துக்கப்பட்டிருக்கிறது. துரௌபதி அச்சமயம் கலியின் ஆவேசத்தால் ஸன்மார்க்கத்தினின்றும் விலகியவர்களாய் துர்பலர்களான பீஷ்மத்ரோணாதி சில ஸாதுக்களும் என்னை வஸ்திராபகர்ஷம் செய்பவனை உபேக்ஷை செய்கின்றனரே என்று வருத்தமடைந்திருந்தாள். வேதமும் கலியின் ஆவேசத்தால் ஸன்மார்க்கத்தினின்றும் விலகியவர்களாய் துர்பலர்களான சில ஸாதுக்கள் என்னை தாறுமாறாய் இழுக்கும் துஷ்டர்களான மாயாவாதிகளின் சித்தாந்தத்தை கண்டனம் செய்வதில் உபேக்ஷை செய்கின்றனரேயன்றி அவர்கள் கண்டிப்பதில்லை என்று வருத்தமடைந்திருக்கிறது. துரௌபதி அப்பேர்ப்பட்ட கலி ஆவேசமில்லாதவர்களான விதுராதி சில ஸாது ஜனங்கள் மிகுந்த துக்கமுள்ளவர்களாயிருந்தும் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாமல் அந்த நிலைமையில் பார்க்கப்பட்டு வந்தாள். வேதமும் இப்படித்தான் துக்கப்பட்டுக் கொண்டிருந்த சில மகரிஷிகள் முதலானவர்களால் சும்மா பார்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. துரௌபதி ஹே வாஸுதேவா! தரணீதர! நாதா! என்று உரக்க அடுத்தடுத்து பகவன் நாமங்களை உச்சரித்திருந்தாள். எல்லா பிரபஞ்சத்தைவிட விலக்ஷணராயும் உற்பத்தியில்லாதவராயும் ஷட்குணங்களுள்ளவராயும் தோஷமில்லாதவராயுமுள்ள நாராயணனை ஹிருதயத்தில் தரித்திருந்திருந்தாள். வேதமும் வாஸுதேவன் தரணீதரன் முதலான பகவன் நாமங்களை உரக்க அடுத்தடுத்து தன் வாக்யங்களில் கூறுகிறது. ஐசுவரியாதி ஷட்குணங்களுள்ளவரும் தோஷமில்லாதவரும் சேதனா சேதனாத்மகமான ஸமஸ்த ஜகத்துக்கும் விலக்ஷணராய் அத்யந்தம் பின்னராயுமுள்ளவரும் உற்பத்தி முதலியவைகள் இல்லாதவரான நாராயணனை எப்போதும் தன் தாத்பர்யமாகக் கொண்டிருக்கிறது.

(தொடரும்.)

# ஆசாரமாலை.

## காயத்ரீ விஷயம்.

(முன் 12-ம் பக்கம் தொடர்ச்சி)

பாத்ம புராணத்திலும், தாபனீபாசிகா சைவ சோஷணீச ப்ரகாசனீ| நைவராஜன்ரவே: சக்தி: சக்திர்நாராயணஸ்யஹ| சூரியன் கொளுத்துவதும் பக்குவப்படுத்துவதும் உலர்த்துவதும் பிரகாசப்படுத்துவதுமான சக்தியைக்கொண்டிருப்பது அவனுடைய சொந்த சக்தியல்ல அது சூரியனுள்ளே இருந்துவரும் நாராயணருடையதே ஆகும் என்றிருக்கிறது. ஸ்ரீமத் பகவத்கீதையில் யதாதித்யகதம்தேஜோ ஜகத்பாஸயதேகிலம்| யச்சந்திரமஸி யச்சாக்னௌ தத்தேஜோ வித்திமாமகம். என்றால் எல்லா ப்ரபஞ்சத்தையும் வெளிச்சமாக்கும் சூரியனிடமிருக்கும் பிரகாச சக்தியும் சரியே சந்திரனிடமும் அக்னியிடமுமிருக்கும் பிரகாச சக்தியும் சரியே என்னுடையது தான் எனக்கு அதீனமானது தான் என்று நாராயணரான ஸ்ரீகிருஷ்ணர் கூறியுள்ளார். விஷ்ணு இதரா ளின் ஆதீனமாயிருந்தாரென்பது வேதங்களில் எங்கும் சொல்லப்படவில்லை. ஸ்ரீகிருஷ்ணாதிகள் வஸுதேவாதிகளிடமிருந்து பிறந்தாரென்பது அவர் வெளியில் ப்ராதுர்பவித்ததைக் குறித்தேயாகும். ஏனெனில் ஏகோ நாராயண ஆஸீத் நப்ரம்மா நச சங்கர: மகாப்ரளயத்தில் நாராயணர் ஒருவரே இருந்தாரே யன்றி ப்ரம்மா இருந்திருக்கவில்லை பரமசிவன் இருந்திருக்கவில்லை என்று வேதம் சொல்லுகிறது. மேலும் யம்காமயேதம் தமுக்ரம் கிருணோமிதம் ப்ரம்மாணம் தம்ரிஷிம் தம்ஸுமேதாம் என்று ப்ரம்மா சிவன் முதலானவர்கள் மகாலட்சுமியின் அதீனமானவர்கள் என்று வேதம் அறிவிப்பதுமன்றி அந்த மகாலட்சுமியும் பகவானுடைய அதீனமானவள்; என்பதற்கு மமயோனி ரப்ஸ்வந்தஸ்ஸமுத்ரே எனக்கு காரணமாயிருப்பவர் ஸமுத்ரத்தினுள்ளே இருக்கும் நாராயணர் என்றும் ததோவதிஷ்டே புவனானிவிச்வா, அந்த பகவானின் அருளால் நான் எல்லா உலகத்திலுமிருந்துவருகிறேன். என்னுடைய காரணமான அந்த நாராயணர், பரோதிவா பர ஏனாப்ருதிவ்யாத்யோலோகத்தை விட உத்தமர். ஸ்ரீபூ என்னும் என்னுடைய இரு ரூபங்களை விட உத்தமர் என்றும் வேதப்பிரமாணமாயிருக்கிறது. இதில் ஸ்பஷ்டமாய் மகாலட்சுமியைவிட நாராயணருக்கு உத்தமத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. மகாலட்சுமியோ அஹம் ருத்ராயதனுராதனோமி ப்ரம்மத் விஷே சரவே ஹந்தவாஉ| அஹம்ஸு வேபிதாமஸ்ய மூர்த்தன் என்று ப்ரம்மாவின் ஐந்தாவது முகத்தைச் சேதித்த ஹிம்ஸிப்பவரான



ருத்ரனைக் கொல்வதற்காக ப்ரளயகாலத்தில் துர்க்கை என்னும் ரூபத்துடன் தனுஸ்ஸை விஸ்தாரப்படுத்துகிறேன். இந்தஜகத்தை சிருஷ்டிப்பவனை ப்ரம்மா ஸகல ஜீவோத்தமனைப் பெற்றேன் என்று வேதத்தில் சொல்லிக்கொண்டிருப்பதால் ப்ரம்ம ருத்திராதிகளை சிருஷ்டி சம்ஹாரம் செய்வது மகாலட்சுமிக்கு உண்டென்று வேதத்தால் தெரியவருகிறது. இத்துடன் அஸ்யதேவஸ்யமீள்ஹுஷோவயா விஷ்ணோ ரேஷஸ்யப்ரபிருதேஹவிகபி: விதேஹி ருத்ரோ ருத்ரியம் மஹித்வம் யாஸிஷ்டம் வர்த்திரச்விநாவிராவத் என்றால் இந்த தேவனை விஷ்ணுவை ஹவிஸ்ஸுகளால் பூஜை செய்யவும் அகங்காராபிமானியாய் வர்தனப்படுத்தும் ருத்திரன் ருத்திரபதவியை அடைந்தான். அசுவினீதேவர்களே? நீங்களும் ஸமஸ்தபோகங்களுள்ள பதவியை அடைந்தீர்களென்று விஷ்ணுவின் ப்ரஸாதத்தால் சிவாதிகளின் ஸ்தானம் சிவாதிகளுக்கு ஏற்பட்டதென்று வேதம் அறிவிக்கிறது. தமேதா: ஸப்தாக்ஷிதய: உபதிஷ்டந்தே முதலான சுருதிகளால் பரமசிவன் முதலான ஸமஸ்ததேவர்களால் உபாஸிக்கப்படுகிறவராய் சொல்லப்படும், அயம்வாவ சிசுர்யோயம் மத்யம: ப்ராண: என்று மத்யமப்ராணருயுள்ள வாயுபகவானுக்கு ப்ராண: ஸ்தூண: என்று ப்ராணசப்தத்தால் சொல்லப்படும் நாருயணர் ஆசிரியன் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆக இத்யாதி சுருதிஸ்மிருதிப்ரமாணங்களைக்கொண்டு ஸர்வோத்தமனை பகவான் நாராயணன் பிராணரெனப் பெயருள்ளவருய் சூரியமண்டலத்திலிருந்து பிரகாசிக்கிருர்தான்.

(தொடரும்)

# செய்தித்திரட்டு.

சேலம் ஜில்லா ஆத்தூரில் மாத்வசங்கமொன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதாயும் அவ்வூரிலுள்ள மாத்வர்களனைவரும் மாதச்சந்தா அணு இரண்டு கொடுப்பதாய் ஒப்புக்கொண்டு மெம்பர்களாய் சேர்ந்திருக்கின்றனரென்றும் இச்சங்கத்திற்கு ஸ்ரீமான்களான வக்கீல் S. பூவராகமூர்த்தி ஆசாரியார் B. A., B. L, அவர்கள் பிரசிடெண்டாகவும் A. P. சுப்புராவ் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனரென்றும் இச்சபையின் ஆதரவில் ஸ்ரீ ஜயதீர்த்தரின் 668வது வருஷத்திய இவ்வாண்டு புண்யதினோற்சவம் இவ்வூர் இரண்டு ஆஞ்சனேய தேவாலயங்களில் அபிஷேகம் ஆருதனை முதலியவைகளால் கொண்டாடப்பட்டதென்றும் அன்று மாலையில் ஸ்ரீமான்களான ஸம்ஸ்கிருத பண்டிதர் S. ஆநந்ததீர்த்தாசாரியாராலும் S. பூவருகமூர்த்தி ஆசாரியாராலும் ஸ்ரீ ஜயதீர்த்தரின் ஜீவிய சரித்திரம் முதலியவைகளைப்பற்றி உபன்யசிக்கப்பட்டு ஆநந்தமாய் கொண்டாடப்பட்டதென்றும் ஷை சங்கத்தின் காரியதரிசி அறிவிக்கிருர்.

கோயமுத்தூர் மத்வ சித்தாந்தசபையின் ஆதரவின் கீழ் ஜுலைமீ 19, 20, 21 தேதிகளில் ஸ்ரீ ஜயதீர்த்தரின் 668வது வருஷத்திய புண்யதினம் வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டதென்றும் பூர்வாராதனை தினத்தன்று ஸ்ரீமான் தெக்கலூர் கிருஷ்ணாசாரியார் பூர்வாராதனையன்

றும் முழுபாகலு மடம் ஸ்வாமிகளான ஸ்ரீ ப்ரேக்ஷாநிதிதீர்த்தஸ்வாமிகள் ஆராதனை தினத்தன்றும் ஸ்ரீமான் மந்திராலயம் கிருஷ்ணாசாரியார் உத்தராராதனை தினத்தன்றும் ஸ்ரீ டீகாசாரியாரின் ஜீவிய சரித்திரத்தைப் பற்றியும் அவருடைய கிரந்தங்களின் அருமை பெருமைகளைப்பற்றியும் உபந்யசித்தனரென்றும் 29உ பானுவாரத்தன்று ஸ்ரீமான் மந்திராலயம் கிருஷ்ணாசாரியாரால் ஸம்ஸ்காரம் என்பதைப்பற்றி முதல்பாகம் உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் இந்நகரில் உடுபிபேஜாவர மடாதிபதி ஸ்ரீ விச்வமான்ய தீர்த்தஸ்வாமிகளும் முழுபாகலு மடாதிபதி ஸ்ரீப்ரேக்ஷாநிதி தீர்த்தஸ்வாமிகளும் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்துடன் தங்கியிருக்கின்றனரென்றும் மாத்வ மகாஜனக்கள் அவர்களை வெகுவாய் ஆராதித்துவருகின்றனரென்றும் ஸ்ரீமான் T. G. கோகுலசந்திரராவ் அறிவித்திருக்கிறார்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீ மத்வ சித்தாந்தசபையின் ஆதரவின்கீழ் மைசூர் வித்வான் தர்க்கவாசஸ்பதி வித்யாபூஷண ஸ்ரீரங்கம். ஸ்ரீமான் பீமாச்சாரியார் அவர்களால் 15—6—35ல் கீதாதத்வம் என்னும் விஷயமும் ஷை மீ 16, 23, 30உகளில் பகவத் கீதையிலும் 21, 28உகளிலும் ஆகஸ்டு 4உயிலும் மத்வவிஜயத்திலும் ஸ்ரீமான் யதுநாதாசாரியாராலும் கோயமுத்தூர் ஸ்ரீமான் ராகவேந்திராசாரியாரால் 14உயன்று சிரார்த்தவிதி உபன்யசிக்கப் பட்டதென்றும் ஒருமாத காலமாய் ஸ்ரீமான் வெங்கடராவ் அவர்களின் வீட்டில் ஹரிவம்சம் புராணம் சொல்லப்பட்டு பிராம்மணசந்தர்ப்பணையுடன் 4உயன்று மங்களோற்சவம் நடத்தப்பட்டதென்றும் முழுபாகலு மடத்தில் ஸ்ரீமத் பாகவதபுராணம் சொல்லப்பட்டு வருகிறதென்றும் மத்வ மதாபிமானிகள் ஸ்ரீமான் ஆசாரியாரை விசேஷமாய் ஆதரிக்கின்றனரென்றும் ஷை சபையின் காரியதரிசி அறிவிக்கிறார்.

இந்நகர் ஸ்ரீமங்களநாயகி ஸமேத ஸ்ரீ ஆதிகும்பேசுவரஸ்வாமியை தக்ஷிணாயன புண்யதினமாகிய 16—7—35உயன்று பரிவாரதேவர்களுடன் வெள்ளி வாகனங்களில் எழுந்தருளச்செய்து திருவீதிகளில் வலம் வந்து காவேரி காசியப தீர்த்தகட்டத்தில் தீர்த்தவாரிகொடுத்து அவ்விடத்தில் மாலைவரை தங்கியிருந்து இரவில் சகல வைபவங்களுடன் வெள்ளிவிமானங்களில் புரப்பாடு செய்வித்து பக்த கோடிகளுக்கு பரமானந்தம் விளைவிக்கப்பட்டதென்று ஷை உபயகாரர் பென்ஷன் கோர்ட் குமாஸ்தா ஸ்ரீமான் T. K. லக்ஷ்மணராவ் அறிவிக்கிறார்.

## குறிப்பு.

### விநாயக சதுர்த்தி.

தஞ்சாவூரிலிருந்து வெளியாகும் இரண்டு மாத்வ பஞ்சாங்கங்களிலும் 1—9—35 பானுவாரத்தன்று விநாயக சதுர்த்தி என்று போடப்பட்டிருக்கிறது. 2—9—35 சோமவாரத்தன்று தான் விநாயகசதுர்த்தி நம்மவர்களால் அநுஷ்டிக்கப்படவேண்டுமென்று நாம் அபிப்ராயப்படுகிறோம். காரணம் சதுர்த்தி கணநாதஸ்ய மாத்ரு வித்யா ப்ரசஸ்யதே மத்யான்ஹ வ்யாபினி சேத் ஸ்யாத் பரதஸ்சேத் பரேஹனி என்னும்



ஸ்பஷ்டமான பிரஹஸ்பதி வசனம் எல்லா கிரந்தங்களாலும் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. அதில் இந்த சித்திவிநாயக வ்ரதத்திற்கு மத்யான்ஹவ்யாபினி அவசியமென்றும் முதல் நாள் மத்யான்ஹவ்யாபினி இருந்தால் த்ருதியையுடன் கூடிய நாள் உத்தமமென்றும் மறுநாள் மத்யான்ஹவ்யாபினி இருந்தால் மறுநாள் தான் செய்யப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் மத்யான்ஹவ்யாபினி மறுநாள் இல்லாமலிருந்தால் தான் த்ருதியையுடன் கூடிய முதல் நாள் உத்தமமென்றும் மறுநாள் மத்யான்ஹவியாபினி இருந்தால் மறுநாள் தான் உத்தமமென்றும் அபிப்ராயப்பட்டிருப்பதால் ஸ்பஷ்டமாய் விளங்குவதால் சோமவாரத்தன்று மத்யான்ஹவ்யாபினி இருப்பதால் இந்த விநாயக சதுர்த்திவ்ரதம் அன்றுதான் செய்யப்படவேண்டியது அவசியமென்பது எமது அபிப்ராயம்.

## ஓர் முக்கியமான விளம்பரம்.

ஸ்ரீ குரு ராகவேந்திர ஸ்வாமியின் அருளால் மாத்வர்களின் ஒரே பத்திரிகையான மாத்வமித்திரன் தற்போது பலவகை சங்கடங்களினின்றும் ஒருவாறு தப்பித்துக்கொண்டு வெற்றியுடன் ஏழுவருஷகாலமாய் தொடர்ந்து பிரதிமாதமும் வெளியாகி யுவ ஸம்வத்ஸரம் ஜேஷ்டமாஸம் பௌர்ணமியுடன் ஏழுவாலியங்களை முடித்துக்கொண்டிருக்கிறது. எட்டாவது வாலியமும் ஆரம்பமாகி வழக்கப்படி மாதந்தோறும் சஞ்சிகைகள் வெளியாகி வருகின்றன. இந்த ஏழுவருஷங்களில் வெளியான ஏழுவாலியங்களில் பெரிய பண்டிதர்களால் நிஷ்கரிஷை செய்துசொல்லக்கூடிய அநேக நூற்றுக்கணக்கான அதிஅற்புத மத்வமதப்ரமேயங்கள், அத்வைத மதத்தின்மீதுள்ள பற்பல ஆக்ஷேபணை விவரங்கள், வேதாந்த விமரிசைகள், தர்மசாஸ்திர இரகசியங்கள், பல்லாயிரக்கணக்கான ஆசார அனுஷ்டான விதிகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் வெளிவந்திருப்பதுமன்றி பல உபநிஷத்துக்கள், பலவகை ஸ்தோத்திரங்கள், மணிமஞ்சரி, மத்வவிஜயம் போன்ற மத்வமதத்தார்களுக்கு அவசியமான நூல்கள் இவைகளின் தமிழ் அர்த்தங்களுடன் ஸர்வக்ஞாசாரியார் என்று உலகம் போற்றிடும் ஸ்ரீ மத்வாசாரியாரால் சுயம் வாய்விட்டு தான் வெகு சிரமப்பட்டு விஷயங்களை சங்கிரஹித்துச்சொன்ன ஸர்வோத்தமமான நூல் என்று சொல்லப்பட்டிருப்பதும், மகாபாரதம் பாகவதம் ராமாயணம் ஹரிவம்சம் பாத்மபுராணம் விஷ்ணுபுராணம் முதலான பதினெண்புராணங்கள் ஸகல வேதாகமங்கள் முதலியவைகளில் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கும் பற்பல சரித்திரங்களையும் விஷயங்களையும் சர்வ ஸௌக்யமாய் ஸர்வோத்தம ரீதியில் எடுத்துச்சொல்லி

தமது மத்வ மதக்கொள்கைக்கு இணைத்துக்காட்டி இன்னது தான் தாத்பர்யமென்று ஸ்ரீமத்வாசாரியாரால் நிர்ணயித்துக் கொடுக்கப்பட்டிருப்பதுமான ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயமென்னும் ஸ்ரீமத்வாசாரியாரின் மகத்தான கிரந்தத்தின் பொதுவாய் பண்டிதர்கள் போதிக்கத்துணியாதிருக்கும் ஸர்வசாஸ்திரார்த்தங்களின் கிரஹமாகிய மகா கடினமான முதல் மூன்று அத்யாயங்களுள்பட சுமார் இருபத்தி இரண்டு அத்யாயங்கள் ஆண் பெண் இருபாலர்களும் நன்கு தெரிந்து கொள்ளும்படி எளிய தமிழ் நடையில் ஸம்ஸ்கிரதத்திலுள்ள மூல சுலோகங்களுக்கு ஸரியான மொழிபெயர்ப்புடன் வெளியாகி இருக்கின்றன. இவ்வளவு அறியபெறிய விஷயக்களடங்கியிருப்பதால்தான் ஒரு வருஷம் ஒரு தடவை சந்தாதாரராயிருந்து இப்பத்திரிகையை கவனத்துடன் படிக்கும் மதப்பற்றுள்ளவர் யாவரும் உடனே நமக்கு எழுதி பிந்திய வாலியங்களைப்பெற முயலுவது எமது மித்திரன் வாசகர்களில் சகஜமாயிருந்துவருவது எல்லோருக்கும் தெரிந்ததே. அதனால் மாத்வமித்திரன் பிந்திய வாலியங்களுக்கு எப்பொழுதுமே டிமாண்டு இருக்கிறது. இப்பத்திரிகை ஆரம்ப காலத்தில் முதல் வாலியம் வெளித்தாள் உட்புறத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான ஊர்களில் பல்லாயிரக் கணக்கான வாசர்களில் விசேஷமாய் பிரசாரத்திலிருந்தால் ஆரம்பத்திலுள்ள சில வாலியங்களின் பல பாகங்கள் அநேகமாய் சிலவழிந்து போயும் சில வாலியங்களுக்கு சில வருஷங்களில் சந்தாதாரர்களின் சங்கியைக் குறைந்திருந்தால் பல பாகங்கள் மீர்ந்து போயுமிருந்தால் பிந்திய வாலியங்கள் பூராவுமே ஒரே சீராக ஒரேவிதமான விலைக்கு மாத்வமித்திரன் வாசகர்களுக்கு நாம் சப்ளை செய்ய முடியாமலிருக்கிறது. தற்போது பிந்திய வாலியங்களின் சங்கியை அதிகமாய்ப் போய் விட்டதால் அவைகளை பூரா வாங்க விரும்புகிறவர்களும் எமது கைவசத்திலுள்ள வாலியங்களுக்குத் தகுந்தபடி நாம் கேட்கும் விலையைக் ஒரே தவணையில் கொடுக்கமுடியாமல் பச்சாத்தாபப்படுகின்றனர். ஆதலால் அநேகரின் அபிப்பிராயப்படி பிந்திய வாலியங்களின் சில பாகங்களை மீண்டும் அச்சிட்டாவது பிந்திய ஏழுவாலியங்களையும் பூர்த்தி செய்து எல்லா கைவசத்திலுள்ள எல்லா ஸ்டாக்குகளையும் குறைத்துவிட எண்ணி அவைகளை எல்லோரும் வாங்க அனுகூலமாயிருக்க எல்லோரும் ஆச்சரியப்படும்படியாய் மிக மிக குறைந்த விலைக்குக் கொடுத்து அந்த ஸ்வல்ப தொகையையும் மாதத்தவணையில் அநேக மாதங்களில்



பெருவதாய் நிச்சயித்து மாத்வமித்திரனை கூடுமான வரையில் அதிகமாய் பிரசாரம் செய்விக்க அடியிற்கண்ட தவணை விலைச் சீட்டு திட்டமொன்றை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த மகத்தான விலைக்குறைவால் கைவசத்திலுள்ள எல்லா ஸ்டாக்குகளும் சிலவழிந்து போகுமாதலாலும் பிறகு இவ்வளவு பாகங்களையும் மீண்டும் அச்சிடுவது அசாத்யமானதாலும் எமது மதத்தார்களும் இம்மித்திரன் வாசகர்களும் இவ்வரிய சந்தர்ப்பத்தை கைக்கொண்டு உடனே தம் தம் மித்திரர்களை இந்த புதிய தவணை விலைச்சீட்டு ஏற்பாட்டுக்கு மெம்பர்களாகச்சேர முந்திக்கொள்ளவேண்டியதவசியமாகும்.

1. பிரதிவாலியத்திற்கும் வருட சந்தா மூன்று ரூபாயாதலால் இந்த ஏழு வாலியங்களின் விலை 21 ரூபாயாயினும் இப் புதிய சீட்டு மெம்பர்களுக்கு மட்டில் இந்த ஏழு வாலியங்கள் பூராவுமே மிகமிகக் குறைந்த விலையான ஒன்பது ரூபாய்க்குக்கொடுக்கப்படும்.

2. இந்த ஒன்பது ரூபாயும் பிரதி மாதம் பௌர்ணமி கழிந்த கிருஷ்ணபக்ஷம் ஸப்தமி திதிக்குள் எமது கைக்கு வந்து சேரும்படி தன் முழு விலாஸ விவரத்துடன் தம் சொந்த சிலவில் மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும். எமது கையெழுத்துள்ள மணியார்டர் ரசீதன்னியில் எந்த தொகையும் நாம் பெற்றதாய் கருதப்படமாட்டாது. மேற்குறித்த தினத்திற்குள் அனுப்பப்படாதிருக்கும் சந்தாவும் பிந்தி, அது, ஒரு நாள் கழிந்திருந்தாலும் சரியே எமது கைக்கு வந்து சேர்ந்திருக்கும் சந்தாவும் எக்காரணத்தைக் கொண்டும் இந்த சீட்டுக்குச் செல்லமாட்டாது. அந்த தொகைகள் நிர்தாக்ஷிண்யமாய் நம்மால் பறிமுதல் செய்யப்பட்டு இந்த சீட்டு சம்பந்தமான இதர சிலவுகளுக்கு உபயோகப்படுத்தப்படுவதுடன் அப்பேர்பட்ட சந்தாதாரர்களின் பெயர். இந்த சீட்டு சந்தாரர்களின் ஜாபிதாவிலிருந்து எடுத்துவிடப்படும். ஆதலால் இந்த சீட்டு மெம்பர்கள் பிரதிமாதம் கிருஷ்ணபக்ஷம் ஸப்தமிக்குள் எமது கைக்கு வந்து சேரும்படியாய் தங்கள் மாத சந்தா தொகை ரூ. மூன்றை அனுப்பவேண்டியது மிகவும் அவசியம்.

3. இவ்வாறு தம் தம் சந்தா தொகை ரூ. மூன்றை மேற்குறித்த தினங்களுக்குள் எமக்கனுப்பி இந்த சீட்டின் சந்தாதாரர்களாய் இருப்பவர்களின் ரிஜிஸ்டர் நம்பர்களைக்கொண்ட சீட்டுகள் பிரதிமாதம் அமாவாசையன்று தகுந்த மனுஷ்யர்களின் எதிரில் நன்றாய் குலுக்கப்பட்டு அவைகளினின்றும் மூன்று

ப்ரைஸ் சீட்டுகள் எடுக்கப்படும். இந்த ப்ரைஸ் விழுந்த மூன்று பிந்திய சந்தா தொகை செலுத்தவேண்டிய நிபந்தனை யன்னியில் ஏழு வாலியங்கள் பூர்வமே இலவசமாய் கொடுக்கப்பட்ட எமது ஆபீஸில் தயாராய் வைக்கப்படுவதுடன் அவரவர்களுக்கு ஒரு வாரத்திற்குள் தபால் மூலம் தகவல்கள் அறிவிக்கப்பட்டு அந்தந்த மாதத்திய மாத்வமித்திரனிலும் பிரசுரிக்கப்படும். அவர்கள் பிந்திய மாதச்சந்தாவை அனுப்பவேண்டியதில்லை. இதனால் முதல் மாதத்தில் அதிர்ஷ்டம் வாய்ந்த மூன்று சந்தாதாரர்கள் ஒரு ரூபாய் செலுத்துவதாலேயே ஏழுவாலியங்களைப் பெறுவார்களென்றும் இவ்வாறே பிரதி மாதத்திலும் மூன்று சந்தாதாரர்கள் இந்த மிகக்குறைந்த ஒன்பது ரூபாய் விலைக்கும் கூட குறைந்த தொகைக்கு இந்த ஏழு வாலியங்கள் ஜாடாவையும் பெற அனுகூலமிருக்கிறதென்றும் இந்த சீட்டு சந்தாதாரர்கள் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டியது.

4. இவ்வாறு பிரைஸ் பெற்றவர்களின் நம்பர்களும் சந்தா தொகையை செலுத்தாமலிருந்தவர்களின் நம்பர்களும் சந்தாதாரர்களின் ஜாபிதாவிலிருந்து எடுத்துவிடப்படுவதுடன் அந்தந்த மாதத்தில் குலுக்குச் சீட்டுகளிலிருந்தும் எடுத்துவிடப்படுமென்பது அவசியம் அறியவேண்டும்.

5. இந்த வாலியங்கள் சந்தாதாரர்களுக்குக் கொடுக்கப்பட மாத்வமித்திரன் காரியாலயத்தில்தான் தயாராய் வைக்கப்பட்டிருக்குமேயன்றி அவரவர்களுக்கு அனுப்பப்பட தபால் செலவு முதலியவை தனியாய் இச்சீட்டு சந்தாதாரர்களால் அனுப்பப்படவேண்டும். பிரைஸ் விழுந்தவர்களுக்கு பிரைஸ் விழுந்த ஒருவாரத்திற்குள் சார்ஜ் விவரத்துடன் தகவல்கள் அறிவிக்கப்படும். சந்தா தொகையை அனுப்பும் மணியார்டர் செலவு முதலியவைகளை சந்தாதாரர்களுக்குத்தான் பொறுத்தது. முழு விலாசங்களில்லாத சந்தா தொகைகளும் குறைவான சந்தாத் தொகையும் எந்த முகாந்திரத்தைக்கொண்டும் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. இவ்வாறு எந்த மாதத்திலும் பிரைஸ் விழாத மெம்பர்களுக்கு ஒன்பதாவது மாதத்தில் கிருஷ்ணபக்ஷம் வரிசையன்று ஏழுவாலியங்கள் பூராவும் கொடுக்க மாத்வமித்திரன் காரியாலயத்தில் தயாராய் வைக்கப்பட்டிருக்கும். தபால் செலவு முதலியவைகளை அனுப்பினால் அவரவர்களின் இடத்திற்கு அவைகள் அனுப்பப்படும். சார்ஜ் விவரம் மாத்வமித்திரனில் பிரசுரிக்கப்படும்



7. மேற்கூறிய நிபந்தனைகளுக்குட்பட்டு குறைந்தபக்ஷம் நூறு சந்தாதாரர்கள் இந்த தவணை விலைச்சீட்டுக்குச் சேர்ந்தால் தான் இந்த குறைந்த விலைக்கு இந்த ஏற்பாடு அமுலுக்குக் கொண்டுவரப்படும். நூறு சந்தாதாரர்கள் சேராவிட்டால் இந்த தவணை விலைச்சீட்டு நடத்தப்படமாட்டாதென்பதை அறியவும்.

8. 27—10—35 ஆசுவீஜமாஸம் அமாவாசை முதல் இந்த சீட்டு அமுலுக்குக் கொண்டுவரப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

9. அதற்குள் நூறு சந்தாதாரர்கள் சேராதிருக்கும் பக்ஷத்தில் இந்த சீட்டுத் துவக்கப்படமாட்டாததலால் மாத்வமித்திரன் பழைய வாலியங்களை இவ்வாறு வெகு சுலபமான விலைக்கு வாங்கப் பிரியமுள்ள ஆஸ்திகமக்கள் யாவரும் இவ்வரிய சந்தர்ப்பத்தைக் கைக்கொண்டு தங்களால் இயன்றளவு சாத்யமான வரையில் எவ்வளவு அதிகமான நபர்களை, சரியாய் மாதம் தவறாமல் குறித்த தினத்திற்குள் சந்தா தொகையை செலுத்த கூடியவர்களை, சந்தாதாரர்களாய் சேர்த்துவைக்கக் கோருகிறோம். ஒரே மணியார்டரில் அநேக நபர்களின் சந்தா அனுப்பப்பட்டாலும் அந்த தொகையை அனுப்பிய ஒவ்வொரு சந்தாதாரரின் முழு விலாஸமும் வியக்தமாய் இருக்கவேண்டியதவசியம்.

10. இந்தயோசனை வெகுநாளாய் இருந்து அநேகர் இந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பதாலும் தற்போதே அநேகர் சந்தாதாரர்களாய் சேர்ந்திருப்பதாலும் 130 மெம்பர்களுக்கு மேல்பட்டவர்களுக்கு நாம் இந்த ஏழுவாலியங்களை சப்ளைசெய்ய முடியாததாலும் இம்மாத்வமித்திரன் பிரசாரமடையும் ஊர்களில் நான்கைந்து நபர்கள்வீதம் சேர்ந்திருந்தால் இந்த குறைந்த எண்ணிக்கை பூர்த்தியாய்விடுமாதலாலும் அவரவர்கள் தம்தம் நண்பர்களுடன் கூடுமானவரையில் சீக்கிரமே பிரதிமாதம் ரூ 1-வீதமுள்ள சந்தாதொகைகளை அனுப்பி சந்தாதாரர்களாய் பதிவுசெய்து கொள்வது உத்தமம். இது வியாபாரநோக்கத்தில் செய்த விளம்பரமாகமாட்டாதென்று உறுதி கூறுகின்றோம். நாம் பிரசுரித்தபடியே எமது விற்பனைகள் தாழ்த்தப்பட்டு வருகிறதென்பது எமது காலண்டர்களின் விற்பனையாலேயே நன்குவிளங்கும். சிறிது ஆலஸ்யமாய் கிரயத்தொகையை அனுப்பிய அநேகருக்கு இவ்வருஷம் காலண்டர்கள் கைவசத்திலுள்ளவைகள் செலவடைந்து போய் அனுப்பப்படமுடியாமல் அவர்களில் நிஷ்டூரத்திற்கு ஆளாகவேண்டிவந்தது. தற்போது இந்தஸ்டாக் செலவாகிவிட்

டால் பிந்தி எந்த கிரயம் கொடுத்தாலும் இவைகள் ஹெலாமென்பதற்கு சிறிதும் இடமில்லை என்பதை உறுதிகூறுகின்றோம்.

11. இந்த சீட்டுக்கு மாத்வமித்திரன் பழைய வாலியங்களின் தவணைவிலைச்சீட்டு என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறதென்றும் மாத்வமித்திரன் மானேஜிங் எடிடர் ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கனாதாசாரியார்தான் இந்த சீட்டின் மானேஜர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

12. இது சம்பந்தமான எந்த கடிதமும் மானேஜருக்கு எழுதப்படலாம். பதிலுக்கு போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பப்படவேண்டியதவசியம். இந்த குலுக்குச் சீட்டு 27-10-35 நடைபெறாமல் ஒத்திவைக்கப்பட்டால் அதன் விவரம் அடுத்த மித்திரனில் அறிவிக்கப்படும். 130 மெம்பர்களுக்குமேல் இந்த சீட்டில் சேர்க்கப்படமாட்டார்களாதலால் பிந்தி பதிவுசெய்துகொண்டவர்களின் சந்தாதொகை நிராகரிக்கப்படும். அதிகமான பாகங்கள் மீண்டும் அச்சிடப்பட அவசியம் ஏற்பட்டு ஏராளமான செலவுசெய்யநேர்ந்து இந்த சீட்டு ஆரம்பிக்கப்படாமலேயே அடியோடு நின்றுபோகும் பக்ஷத்தில் எமது செலவில் அவரவர்களின் சந்தாதொகை வாபீஸ் செய்துவிடப்படும்.

## விசேஷ தினங்கள்.

### பாத்ரபத மாஸம்.

| | | |
|---|---|---|
| 1—9—35 | பானுவாரம் | ஸாமவேத உபாகர்மம், இதராளுக்கு விநாயக சதுர்த்தி. |
| 2—9—35 | சோமவாரம் | மாத்வர்கள் எல்லோருக்கும் இன்றுதான் விநாயக சதுர்த்தி சாஸ்திரசம்மதம். |
| 3—9—35 | மங்களவாரம் | ரிஷிபஞ்சமி, அகண்டதிதி விரதாரம்பம் உத்யாபனம் முதலியவை செய்யப் [படலாம். |
| 9—9—35 | சோமவாரம் | ஏகாதசி உப. |
| 10—9—35 | மங்களவாரம் | த்வாதசி ஸாதனி மணி 6-6க்குள் பாரணை. சிரவணம் உப இல்லை, விஷ்ணு [ப உப. இல்லை |
| 11—9—35 | புதவாரம் | அநந்த விரதம். |
| 12—9—35 | குருவாரம் | பௌர்ணமி. விஷ்ணு ப. உப. |
| 13—9—35 | சுக்ரவாரம் | மகாளயம் ஆரம்பம் |
| 16—9—35 | சோமவாரம் | மகாபரணி. |
| 19—9—35 | குருவாரம் | மத்யாஷ்டமி. |
| 20—9—35 | சுக்ரவாரம் | மகாவ்யதிபாதம் அவிதவா நவமி. |
| 23—9—35 | சோமவாரம் | ஏகாதசி உப. |
| 24—9—35 | மங்களவாரம் | யதிமஹாளயம். |
| 27—9—35 | சுக்ரவாரம் | ஸர்வபித்ருஅமாவாசை. விஷ்ணுப உப |

20873
சென்னை-600 0..

வருட சந்தா ரூ. 3 Reg

டி. எஸ். ஆ...
அண்டு
கம்பெனி,
கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909
தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில் தயாரித்து விற்பனைக்கு தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு
வாஸனைச்சுண்ணாம்பு
வாஸனைப் புகையிலை
ஸ்னானப்பவுடர்
கேஸர் பவுடர்
அம்பர், அரகஜா
தசாங்கம்
பலகாய்கரி ஊர்காய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ஷர்பத் தினுசுகள்
கொப்பரைச்சீவல்
கோகுல் கூந்தல் [தைலம்
பற்பொடி
ஊதுவத்திகள்

சந்தனாதித்தைலம்,
அரைக்கீரைவிதைத் தைலம்,
மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.
கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed at Sri Venkateswar Printing Works and
Published by Bhagavatha Ranganathachariar, Kumba

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

வேந்திரஸ்வாமிகளின் சரித்திரம் —எந்த பாஷையிலுமே ர் இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங் ஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித் கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமி டம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மே லும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்ச ரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், ச்லோகங்கள் தேவ நாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க் கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் மிஞ்சி வெமாறு இருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணு 0—8—0 தபாற் கூலி அணு 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:- தேவநாகரத்திலும், தமிழிலும் ச்லோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணு 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் ச்லோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன ச்லோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்ப தும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 0—5—0 தபாற்கூலி அணு ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணு 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணு 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:- அணு 6. தபாற்கூலி அணு 0—1—0.

கீதாதத்வம்:- ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனாமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலி யைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப் படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.